KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்.

V7. No.45. 15.11.1934.

ப

ஙட
M211,N28KN
N34.7.45
199195

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 7] 1934 ஞு நவம்பர் மீ 15 உ [No. 45

OFFICE OF THE [illegible] 21 MAR 1935 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 705

2. தமிழ்ப் பாடம்—(இலக்கணம்) 708

3. கம்பராமாயணம் (அரசியற் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 709

4. இரத்நாவளி (அங்கம் 2.)
(வடமொழிநாடக மொழிபெயர்ப்பு) 712

5. கழையோடைக் கண்ணகி வருகைப்பத்து.
நவாலி. க. சோமசுந்தரப் புலவர் 714

6. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. 716

7. தமிழ் நாட்டு வணிகர்.
மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் 717

8 வர்த்தமானம் 720

## கலாநிலயம்

### யார் நாண? 1.

மற்றவர்களுடைய செய்கையைமதிப்பதன்முன்னர் ஒவ்வொருவரும் முதலில் தம்முடைய உள்ளத்தையே தேடித் துருவி ஆராய்ந்து தெளிந்துகொள்ளவேண்டிய முக்கியமான விஷயம் ஒன்று உளது. இதனைத்தெளிந்து அம்முடிவிற்கு ஏற்ற முயற்சிகள் செய்வோமாஞல், மற்றவர் நமக்குத் தீங்கு இழைத்தார்களே யென்று நோகவும் மாட்டோம்; தீங்குகள் பிறர் நமக்குச் செய்யாமல் காத்தவர்களும் ஆவோம்; மற்றவர் நோகும்படி நாமும் அவர்களுக்குத் தீங்கு செய்யாதவர்களும் ஆவோம். இந்தநிலை யெய்தினல், அப்புறம் வேறென்ன வேண்டும்! இன்று காலையில் எம்முடன் உரையாடிக்கொண்டிருந்தவொரு நண்பர் வாயினின்றுவந்த சிலசொற்கள் இவ்வெண்ணங்களை எம்மனத்தில் எழுப்பித் தந்தன.

அவர்சென்னையிலுள்ள ஒரு பாடசாலையில் உபாத்தியாயாகவிருப்பவர். அவ்வேலையில் அவர் அமர்ந்தபோது பி. ஏ. பட்டப் பரிக்ஷையில் தேறிமுடிவதற்கு ஒரு பாகம் குறைவாயிருந்தது. இவர் அவ்வுபாத்தியாயராக அமர்ந்த இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு, அந்தக் குறையையு முடித்துவிடலாம்என்னும் கருத்து உடையவராய், தாம் அமர்ந்திருந்த பள்ளிக்கூடத்திலிருந்த 'லீவு' வாங்கிக்கொண்டு அந்தப் பரிக்ஷைக்குப்படித்தார். அப்படி'லீவு'வாங்கிக்கொண்ட போது தமக்குப்பதிலாகத் தாம் வரும்வரையில் பள்ளிக்கூடத்தில் வேலைபார்த்திருக்கும்படி தமக்குத்தெரிந்த ஒருநண்பரை அமர்த்தியிருந்தார். இப்பொழுது இவருக்குப் [illegible]. "இனி என்ன செய்யப்போகின்றீர்" என்று நாம் அவரைக் கேட்கலானோம். "மீண்டும் என் உபாத்தியாயர் வேலைக்குத்தான் அந்தப்பள்ளிக்கூடத்திற்குத்திரும்பிவிடப்போகின்றேன்" என்றார். "ஆனல், உமக்குப்பதிலாக இப்பொழுது வேலைபார்த்துக்கொண்டிருப்பவரது கதி என்ன ஆவது" என்னக் கேட்டோம்; "அவர் போய் விடவேண்டியதுதான்" என்றார். அப்பொழுது நாம், "நீங்கள் பி. ஏ. படித்திருக்கின்றீர், ஆகையால், வேறு வேலைகளும் உங்களுக்குக் கிடைக்க இயலும்; உங்களுக்குப் பதிலாக இப்பொழுது வேலை பார்த்துவருகின்றவருக்கோ, இதனைவிட்டால் வேறுவேலை கிடைப்பது அரியதாயிற்றே; அப்புறம் அவர் என்ன செய்வார்" என்று நாம் சொல்லவும், அவர் சற்றேனும் தயங்காமல், எம் பிள்ளைமதியைக் கண்டு வியந்தார் போல் சிறிது நகைத்து, "அவர் எப்படியாவது போகட்டுமே, அவருக்கு நானு பொறுப்பாளி" என்று எடுத்துக்கூறினர். இவர் இப்படிச் சொல்லியபோது, "அவருக்கு நானுபொறுப்பாளி" என்னும் இவ்வாசகத்தை இதற்குமுன் எவ்விடத்திலோ கேட்டிருக்கின்றோம் போல் இருக்கின்றதே என்ற எண்ணம் எம் மனத்தில் தோன்றியது; ஆயினும் அப்பொழுது நினைவு வரவில்லை. அவர் விடைபெற்றுச்சென்றார். அவர்சென்றபின்னும் இச்சொற்கள் மீண்டும் மீண்டும் எமது சிந்தனையில் தோன்றித் தோன்றி யுறுத்தின. உறுத்திய வன்மையால் நினைவும் கிளர்ந்தது. ஆம். கிறிஸ்தவர் சமயநூலாகிய பைபிலில் இருக்கின்றது இவ்வாசகம்.

கிறிஸ்தவ கோட்பாட்டின்படி, மக்கள் இனத்திற்கெல்லாம் ஆதித் தாய்தந்தையர்களாய்க் கடவுளால் படைக்கப்பட்டவர் ஆதாம் ஏவாள் என்பவர். இவர்களுக்கு இரண்டு புதல்வர் பிறந்தனர். மூத்தவன் பெயர் கேய்ன் ; இளையவன் பெயர் ஏபேல். இளையவனாகிய இந்த ஏபெல் என்பவன் கடவுளுக்கு மிக்க அண்மியனாகவும் அவருடைய கருணைக்குப் பாத்திரமாகவும் இருந்தான். கடவுள் இவனுடைய காணிக்கையை யேற்றுக்கொண்டு, மூத்தவனாகிய கேய்ன் செலுத்த வந்த காணிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இதுபற்றிக் கேய்னிற்கும் ஏபெல்லுக்கும் பேச்சு நிகழவும் அப்பொழுது கேய்ன் தன் தம்பிக்கு விரோதமாக எழுந்து அவனைக் கொன்றுவிட்டான். இதன் பின்னர்க் கடவுள் கேய்னைச் சந்தித்து, “உன் சகோதரன் ஏபெல்எங்கே” என்று கேட்டார். அதற்குக் கேய்ன், “நான் அறியேன், நானோ என் சகோதரனுக்குப் பொறுப்பாளி” என்று பதிற் கூறினான்.

உடன் பிறந்தவனைக் கொன்ற அக் கேய்னால் இக் கேள்வி கேட்கப்பட்டதாதலின், இக்கேள்விக்கு எதிர்மறை விடை கூறுவாரெல்லாம் கேய்னின் சந்ததியார் என்று கருதப்படுகின்றனர். கெட்டவன் என்பதற்கு அடையாளம் இக்கேள்விக்கு எதிர்மறை விடைகொடுத்தலே என்பர். அதற்கெதிராக, “ஆம், நான் என் சகோதரனுக்குப் பொறுப்பாளியே” என்று உடன்பட்டுக் கூறுவோர் நல்லவர்களாகவுங் கருதப்படுகின்றனர். மேல்நோக்கிற்கு இது தக்கதேபோல் தோன்றலாம். ஆயினும், பொறுப்பாளியாவதும் பொறுக்கப்படுபவனாவதும், எதிரெதிர் மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைகளே யன்றி ஒருதலையாய் நிற்கவல்லன வல்லவே.

“என்னவோவிது! நானோ என் தம்பிக்குப் பொறுப்பாளி”, என்னும் இந்தப் பழைய கேள்விக்குத் தக்க விடை கூறியபின்னரே தம்முடைய வாழ்க்கையைத் துவக்கவேண்டும் என்று இதுவரையில் ஒருவரும் நினைத்ததுஇல்லையாயினும், மற்றவர்க்குத் தாம் பொறுப்பாளிகள் அல்லர் அல்லர் என்றே எல்லோரும் தம் செய்கைகளால் காட்டுகின்றனர். மனித ரனைவரும், எத்தொழிலில் இருப்பவரும் எந்நிலையில் இருப்பவரும் அந்தக் கேய்னினுடைய மரபு வழுவாமல் தொடர்ந்து வந்திருக்கின்றனர் என்பதையே, இன்று காலையில் எம்மைச் சந்தித்த அந்நண்பர் தம்முடைய மொழிகளால் சாதித்தார். வேறில்லை. இருப்பினும், இவரை மாத்திரம் குறைகூறுவது தருமம் ஆகாது. இவருடன் பழகியிருந்த அவர், இத்தகையஎண்ணம் இவருக்கு வராமல், உள்ளுந்தோறும் உயர்வையே உள்ளும்படி என்ன முயற்சிகள் செய்தார் என்று அவரையுங் கேட்கலாமே. அவர் முயற்சிகள் செய்தும் பின் இவர் வாய்நின்று இக்கேள்வியே வந்திருக்குமாயின் அப்பொழுதுதா னவர்மீது பிழையில்லை. இந்தக் கேள்வி கேட்கப்பட்டவரும் அவ்வகையில் பிழையற்றவர் ஆகமாட்டார். “நானோ பிறர்க்குப்பொறுப்பாளி” என்று கேட்பவரை யொக்க, அக்கேள்வி கேட்கப்பட்டவரும் அக்கேள்விக்கு இலக்காயிருப்பவரும் குற்றமுடையவர்களே என்று கொள்ளல் வேண்டும்.

“என் சகோதரனுக்குப் பொறுப்பாளி நானோ” என்னுமக் கேள்வி, சகோதரனைக் கொலைசெய்து நின்ற கேய்னின் வாய்நின்று முதலில் புறப்பட்டதே ஏனையோரை ஏமாப்படையச் செய்கின்றது. இதனின்று, கேய்னைப்போன்ற கொடிய குணமும் கொலைத் தொழிலும் உடையவர்களாலேயே இத்தகைய கேள்வி கேட்பதற்குரியதாக நிற்கின்றதென்று மனிதர் எளிதில் எண்ணிவிடுகின்றனர். அப்படி எண்ணுவது நேரன்று. இந்தக் கேள்வி ஏபலாலும் ஏன் கேட்கப்படவில்லை. கேய்ன் ஏபலைப்பற்றி இப்படிக் கேட்டதைவிட ஏபலே கேய்னைப்பற்றிக் கேட்டிருக்கவேண்டுமென்பதற்குப் பல நியாயமான காரணங்கள் இருக்கின்றன. இருதிறத்தும் ஒப்பநோக்காமல் ஒருதலையாய் மதிக்குமொரு மானுடமனத்தின் வஞ்சனையால் நாம் கேய்னை வெறுத்து ஏபலைப் பரிகின்றவராகின்றோம். ஆயின், சகோதரப் பொறுப்பெல்லாம் ஒரே பக்கத்தில்தான் இருக்கின்றதா ? இந்தப்படி கொலை நினைக்கும் குணமுடைய கேய்னின் நல்லொழுக்கங்களைப்பற்றிய பொறுப்பு ஏபெல்லிற்கு யாதும் இருந்ததில்லைஎன்று நாம்எண்ணிவிடலாமா? “என்னுடைய தம்பிக்குநான் பொறுப்பாளியாயிருந்தும் அத்தம்பியைக் கொன்றுவிட்டேனே” என்று அக்குற்றத்தின் நினைவு தன் மனச்சாக்ஷியை உறுத்தியபடியாற்றான் கேய்ன் அந்தக் கேள்வியைக் கேட்கலானான். குற்றம் செய்த மனிதர் தம் மனச்சாக்ஷியின் வாயை அடக்குவதற்கு முயல்கின்றபல சூழ்ச்சிகளில்ஒன்று இத்தகைய பொறுப்பிகந்த பொதுவிதிகளைப் பிறப்பிப்பதும் ஆம். கேய்ன் ஏபெல்லுக்கு எத்துணைப் பொறுப்பாளியோ அத்துணைப்பொறுப்பாளியே ஏபெல்லும் கேய்னுக்கு ஆகவேண்டியவனாகஇருக்க, அப்பொறுப்பைத்தான் செலுத்தாமலிருந்தும் ஏபெல்லின் மனச்சாக்ஷி சும்மாவிருந்துவிட்டதென்றால், இவனைவிடக் கேய்னே சிறந்தவன் என்னப் பாராட்டற்குரியவனாகின்றான். “என் தமையன் எப்படிப்போனால் எனக்கென்ன” வென்றே ஏபெல்லும் இருந்துவிட்டான் என்றே இதனால் எண்ணவேண்டிவருகின்றது. நெறி தப்பிநடந்ததன் தமையன் குணத்தைப்பற்றி ஏபெல் கவலைகொண்டு அதனை நேராக்குவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யாமையால் ஏபெல்லுந் தன்னுடைய கடமையைச் செலுத்தாதவன் ஆயினான் என்பதை மனிதர் மனத்துட் கொள்வாராயின், மானுட வாழ்க்கையும் நாகரிகமுந் தருமமும் ஏனைய முயற்சிகளும் முற்றிலும்வேறாக வளர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனால் கேய்ன் குற்றவாளி அல்லன்என்று நாம் சாதிக்க நினைக்கின்றோம் என்று எண்ணவேண்டா; அவன் குற்றவாளி குற்றவாளியே. ஆயினும், ஏபெல்லும் குற்றவாளி அல்லானுமல்லன் என்பதையே நினைவிற்கொள்ளவேண்டுகின்றோம். ஏபெல்லைப் பார்த்து நாம், “ஏபெல்லே, நீ உன்னுடைய நற்குணங்களை மேன்மேலும் வளர்ப்பதில் மட்டுமே உன்னுடைய கவனம் முழுவதையும் அளவுகடந்து செலுத்திக் கிடந்தாய். குணங்குறைந்த உன்னுடைய தமையன் இவ்வாறு பாழாய்ப்போகும்படி விட்டுவிட்டு நீ யேன் சும்மாவிருந்தனை? இதுமுற்றிலும்தவறல்லவா. ஆகையினால் உன்னைக் கொலைசெய்த பழி உன் தலைமீதே யிருக்கின்றது. சொல்வனசொல்லிச் செய்யத்தகுவனசெய்து உன் செல்வாக்கினால் அவனைத் தீயவழியினின்றுந் திருப்பி[illegible]யின் உன்னைக்கொன்றிருக்கமாட்டானல்லவா? அப்படிச் செய்திருப்பாயாயின் அவனும்உன்னைப்போல் நல்லவனாகமாறியிருப்பானே. இதற்குஎன்னஉத்தரம்சொல்லுகின்றாய்?” என்று கேட்கின்ற உரிமை நமக்கு எந்நாளும் இருக்கின்றது. இதற்கு என்னவகை விடைகூறித் தற்காத்துக்கொள்ளவல்லன் இவ்வேபெல்? கேய்ன் மூத்தவனாதலால் பொறுப்பெல்லாம் அவனதே என்பானோ! மற்று, ஏபெல் கடவுளுக்கு அண்மியனா யிருக்கின்றான் என்பதை மறத்தலாகாது. கேய்னைநல்வழிப்படுத்தித்திருத்தும்படி கடவுளைப் பிரார்த்தித்துக்கொள்ளாமல் கேய்னின் குணங்கள் முழுக் கோணலாகவே போகும்படிவிட்டுவிட்டு ஏபெல்லும் தன் சகோதரன் எக்கேடு கெட்டால் என்னவென்று எண்ணி, அவனுக்குப் பொறுப்பாளி தான் அல்லன் என்பதைத் தன் நடத்தையால் சாதித்துவிட்டானல்லவா! ஆதலின், தாமோ நல்லவர்களாயிருந்தும் பிறர் தமக்குத் தீங்குசெய்தார்களே என்று குறைகள்கூறுவோர்க்கு ஒன்று உணர்த்துவோம். “எனக்கு அவன் இத்தீங்கு செய்தானே” என்று ஒருவன் சொல்லிச் சொல்லிப் புலம்புவானாயின் அவனைக் கண்டு ஒருவரும் இரங்க வேண்டாவே. “உனக்குத் தீங்குசெய்யலாகாது என்னும் பொறுப்பை ஏன் அவன்மீது சுமத்துகின்றாய்” என்று நாம் இவனைக்கேட்பதே முறை. “ஏன், அவனுக்கு அந்தப்பொறுப்பு இல்லையோ” என்று இவன் எதிர்த்துப் பேசுவானானால் அவனுக்குமுன் நாம் வாயடங்கி நிற்கவேண்டியதில்லை. இதன்மேல் கேள்வியும் விடையும் இன்னவாறு தொடரலாம்:—

கேள்வி:—ஒருவன் மற்றவனுக்குத் தீங்கு செய்தானால், செய்யப்பட்டவன் அடைகின்ற நஷ்டம்ஒருபுறம் இருக்க, செய்தவனுக்கே அதனால் நன்மையுண்டாகுமோ, தீமை யுண்டாகுமோ ?

விடை:—தீங்குசெய்தவர் தீமைதான் அடைவார் ; ஆகையால் அவன் தீமைதான் அடைவான்.

கேள்வி:—உனக்குத் தீங்கு செய்த அவன் அப்படியே மற்றவர்களுக்குந் தீங்கு செய்யலாமல்லவா ?

விடை:—செய்யலாம்.

கேள்வி:—அப்படிச் செய்வதால் இவனும் தீமையடைந்து மற்றவர்களும் கஷ்டப்பட நேருமல்லவா?

விடை:—ஆம்.

கேள்வி:—ஆயின், அவனும் தீமையடைந்து மற்றவர்களும் கஷ்டப்படுவார்களே என்று எப்பொழுதேனும் நீ இரங்கியது உண்டோ ?

விடை:-மனமிரங்கி நான் அதனைத் தடுக்க என்ன செய்திருக்கக் கூடும் ?

கேள்வி:—என்னை நீ எதிர்க்கேள்வி கேட்காதே. நீ என்ன செய்திருக்கக்கூடும் என்பதைப் பின்னர்ச் சிந்திக்கலாம். முதலில், நீ மனம் இரங்கியதுண்டோ என்றுநான் கேட்டதற்கு உண்மையாக உன் பதிலைச் சொல்?

விடை:—நான் மனம் இரங்கியதில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?

கேள்வி: — பார்பார்! மீண்டும் என்னைக் கேள்வியே கேட்கின்றாயேயொழிய, நான்கேட்டதற்கு இன்னும் நீ பதிற்சொல்லவில்லையே. அவன் உனக்குத் தீங்கு செய்தானென நீ குற்றம்கூறுவதிலிருந்தே நீ அவன் பொருட்டாகிலும் அவனால் தீங்கு அடையக்கூடிய மற்றவர் பொருட்டாகிலும் ஒருபோதும் இரங்கியதில்லை என்பது வெளிப்படையாகையாற்றான் எனக்குத் தெரிந்தது. நல்லது, இப்பொழுது என்கேள்விக்குப் பதிற் சொல்?

விடை:—இப்படி நெருக்கிநெருக்கிக் கேட்டால் நான் என்ன சொல்வது!

கேள்வி:—எனின், நீ அவனுக்காகவேனும் மற்றவர்களுக்காகவேனும் இரங்கியதில்லை என்று, வாய்திறந்து உரைக்கக் கூசுகின்றாயாயினும் அதனை உன் மனமே சாக்ஷியாக ஒத்துக்கொள்ளுகின்றாயல்லவா. நல்லது, நண்பா, அவர்கள் தீமை அடையலாகாது என்னும் பொறுப்பை நீ ஏற்றுக்கொள்ளாதபோது, பிறர்மாத்திரம் உனக்குத் தீங்குசெய்யலாகாதென்னும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருத்தல்வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கின்றாய்?

விடை:— ஆகையினால், அவன் எனக்குத் தீங்கு செய்ததுமல்லாமல் நானே கெட்டவன்என்ற பட்டமும் உன்னிடத்தில் பெறவேண்டி யிருக்கின்றது!

கேள்வி:—யார் கெட்டவன், யார்நல்லவன் என்ற பேச்சு இப்பொழுது வேண்டா. நீஅவனுக்கு இரங்காதது போலவே அவனும் உனக்கு இரங்கவில்லை என்பதை, நண்பனே, இப்பொழுது நீ உணர்ந்தாற் போதும். இனி, உன்னிடத்திலேயே நீ கண்டுகொள்ள வேண்டிய குற்றத்தை அவனிடத்திற் கண்டு நீ குறை கூறமாட்டாயே?

விடை:—கூறுவேனோ மாட்டானோ, யோசித்து நான் நாளைக்குச் சொல்கின்றேன்.

எத்தனை நாள் யோசித்தாலும், தன்னெஞ்சறிவதைப் பொய்க்காமற் சொல்லவேண்டுமாயின், “மாட்டேன்” என்பதன்றி வேறொன்றுசெப்புவதெல்லாம் வெறும் பேச்சுக்களே. இப்படிப்பார்க்குங்கால், பிறர் நமக்குச்செய்த தீமைகளை நாம்பொறுத்துக்கொள்ள வேண்டுமென்பது மிகப்பெரியதோர் அறமாகத் தோன்றவில்லை. ஒருவன் தனக்கேயும் மற்றவர்களுக்கும் பொல்லாங்கு செய்யாதபடி அவனுக்குயாதும்செய்து வைக்கமுயலாமல், “நமக்கென்ன” வென்று சும்மாவிருந்து, “நான் உண்டு என் வேலையுண்டு” என்று விவகரித்தவர், பிறரால் தீங்குண்டு வருந்தும்போது, அப்பிறரைப் பொறுப்பதென்னும் சிறியசெய்தி ஒருபுறமிருக்க, அவருக்குத் தாம் முன் யாதும் செய்யாமலிருந்த அந்தக்குற்றத்திற்காகத் தம்மையேபொறுத்துக்கொள்ளமாட்டாமல் அன்றோ தவித்தல்முறை. இவ்வகையில், தம்மைத் தாம் பொறுத்துக்கொள்ளலே மிக அரிது என்பதை உணரமாட்டாதவர்களே, மற்றவர்களை ஒருநாளும் பொறுக்கமாட்டார்கள். இதனை உணர்ந்தவர் நிலையும் நினைவும் வேறுதல் வேண்டும். இன்னவர், தமக்கு ஒருவர் இன்னா செய்தக்கால், அவர் நாணும்படி நன்னயஞ் செய்தலின்றித் தாமேநாணி அதற்குக்கழுவாயாக நன்னயஞ்செய்ய நனி விரைவார் என்பது திண்ணம்.



M21,N28KN
N34;245
149192

# தமிழ்ப்பாடம் 145.

[693-வது பக்கத் தொடர்ச்சி]

## இலக்கணம்

நிலைமொழி யிறுதியில் ணகரமெய்யும், வருமொழி முதலில் வல்லினமெய்களில் ககர சகர பகர மெய்களும் நிற்பதற்குரிய விதிகளைக் கண்டோம்.

இனி, நிலைமொழி யிறுதியில் ணகர மெய்யும் வருமொழி முதலில் தகரமெய்யும் நின்றக்கால் என்னும் என்பதைக் காணல் வேண்டும்:—

III (b) நிலைமொழியிறுதியில் ணகரமெய் + வருமொழிமுதலில் தகரமெய்.

(1) வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வர, நிலைமொழி யீற்று ணகரமெய் எவ்வெவ்விடங்களில் டகரமெய்யாகத் திரியுமோ, அவ்விடங்களில் நிலைமொழி யீற்று ணகரமெய் வருமொழி முதலில் தகரமெய் வந்தாலும் டகரமெய்யாகத் திரியும். ஆனால், இந்த ணகரஈறு டகரமெய்யாகத் திரிவதுமாத்திரமல்லாமல், வருமொழி முதலில் நின்ற தகரமெய்யும் (ககர சகர பகரங்களைப் போல்அல்லாமல்) டகர மெய்யாய்த் திரியும்.

i மண் + சுவர் = மட்சுவர்.
மண் + தரை = மட் + தரை = மட்டரை.

மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில், வருமொழிமுதலில் சகரம்வர நிலைமொழியீற்று ணகரமெய் டகர மெய்யாகத் திரிந்தது. ஆனால், தகரம் வர, அத் தகரமெய்யும் டகர மெய்யாய்த் திரியலாயிற்று.

ii கண் + கடை = கட்கடை } ஆறும் வேற்றுமைத் தொகை.
கண் + துளை = கட்டுளை }

(2) நிலைமொழி யீற்று ணகரமெய், வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் நிற்க, எவ்வெவ்விடங்களில் டகரமாகத் திரியாமல் இயல்பாயிருக்குமோ, அவ்விடங்களில் தகரம் நின்றாலும் இயல்பாயிருக்கும். ஆனால், வருமொழி முதலில் நின்ற அந்தத் தகரம் மாத்திரம் டகரமாகத் திரியும்.

ஆண் + குணம் = ஆண் குணம் }
ஆண் + தகை = ஆண்டகை }
எண் + கரம் = எண் கரம் }
எண் + தோள் = எண்டோள் }
விண் + சுடர் = விண்சுடர் }
விண் + திங்கள் = விண்டிங்கள் }
கண் + கொட்டியது = கண் கொட்டியது }
கண் + துடித்தது = கண்டுடித்தது }
உண் + சோறு = உண்சோறு }
உண் + தயிர் = உண்டயிர் }

குறிப்பு:—பண்புத்தொகையில், வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வர நிலைமொழியீற்று ணகரமெய் டகரமெய்யாய்த் திரியும் என முன் கூறினோம். பண்புத் தொகையிலும் இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளுக்கே இவ்விதிபொருந்தும் எனக்கொள்க. வெண்மை திண்மை நுண்மை தண்மைஎன்பனபோன்றபண்புப்பெயர்கள் வெண் திண் நுண் தண் எனநிற்குமாயின் வருமொழிமுதலில் ககரசகர பகரங்கள்வர, அந்த ணகரமெய் டகர மெய்யாய்த் திரியாது.

வெண் + சாம்பல் = வெண் சாம்பல்
திண் + புயம் = திண்புயம்
நுண் + கலை = நுண்கலை
தண் + பூ = தண்பூ

ஆதலால், இவ்வகை ஈறு கெட்டு நிற்கின்ற பண்புப் பெயர்களுக்குப்பின் வருமொழிமுதலில் தகரம் வருமாயின், அத் தகரம் மாத்திரம் டகரமாகத் திரியும்; இந்த ணகரமெய் டகரமெய்யாய்த் திரியாது:-

வெண்மை + திங்கள் = வெண் + திங்கள் = வெண்டிங்கள்]
திண்மை + தோள் = திண் + தோள் = திண்டோள்.
நுண் + தோல் = நுண்டோல்.
தண் + தாமரை = தண்டாமரை.

எனினும், மண் + தலம், என்பது (மண்ணாகிய தலம் என விரியும்) இருபெயரொட்டுப் பண்புத் தொகையாயிருந்தாலும் (கண் + புலன் = கட்புலன் எனப் புணர்ந்ததுபோல்) மட்டலம் எனப் புணராமல் மண்டலம் என்றே புணரலாகின்றது. விண் + தலம் = விண்டலம் என்று வருவதால் இதனையும் மண்டலம் எனவழங்குகின்றனர் போலும். அல்லது தலம் என்பது வடமொழியாயிருப்பதும் இதற்குக் காரணமாகலாம்.

குறிப்பு:—ஊண் தூண் பூண் எனத் தனி நெடிலையடுத்துவரும் ணகரமெய்யீற்றுச் சொற்களுக்கு இங்குரைத்த விதிகள் பொருந்துமோவென்பது சந்தேகமாயிருக்கின்றது. தூண் தலை, என்பது ஆறும்வேற்றுமைத் தொகையாயினும் தூட்டலை எனப் புணருமென்று கொள்வதற்கில்லையென நினைக்கின்றோம்.

---

### னகரமெய்

I. நிலைமொழியிறுதியில் னகரமெய் + வருமொழி முதலில் இடையினமெய்.

(a) நிலைமொழி யிறுதியில் னகரமெய்யும் வருமொழி முதலில் யகரமும் வரின்—யாதும் விகாரமின்றிப் புணரினும் புணரலாம், அல்லது ஒருஇகரம் தோன்றினுந் தோன்றலாம். இது எல்லாத் தொடர்களுக்கும் ஒக்கும்:—

பொன் + யானை = பொன் யானை—பொன்னியானை.
சொன்னேன் + யான் = சொன்னேன் யான்—சொன்னேனியான்

(b) நிலைமொழி யிறுதியில் னகரமெய்யும் வருமொழிமுதலில் வகரமெய்யும் வருமாயின், எல்லாத் தொடர்களிலும் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்:—

பொன் + விலங்கு = பொன்விலங்கு
தேன் + வாங்கினன் = தேன் வாங்கினன்
கான் + வழி = கான் வழி
வீட்டின் + வாயில் = வீட்டின் வாயில்
காண்பான் + வந்தேன் = காண்பான் வந்தேன்.

II. நிலைமொழியிறுதியில் னகரமெய் + வருமொழிமுதலில் மெல்லின மெய்.

(a) நிலைமொழியிறுதியில் னகரமெய்யும், வருமொழிமுதலில் ஞகரம்அல்லது மகரமெய்யும் நிற்குமானால் எல்லாத் தொடர்களிலும் இயல்பாய்ப் புணரும்.

பொன் + ஞாயிறு = பொன்ஞாயிறு.



மகன் + மகிழ்ந்தான் = மகன் மகிழ்ந்தான்.
வரின் + மகிழ்வேன் = வரின் மகிழ்வேன்.

(b) நிலைமொழி யிறுதியில் னகரமெய்யும் வருமொழி முதலில் நகரமெய்யும் நிற்றல்.

(1) நிலைமொழி னகர மெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாயிருந்து, அவ்விரண்டு எழுத்துக்களிலும் முதலெழுத்துக் குறிலாகவும் இருக்குமானால், வருமொழி முதலில் நகரம் வர—நிலைமொழி யீற்று னகரமெய் அப்படியே யிருந்து, வருமொழிமுதல் நகரம் மாத்திரம் எல்லாத்தொடர்களிலும் னகரமாகத் திரியும்.

நின் + நலம் = நின்னலம்.
பொன் + நாடு = பொன்னாடு.
என் + நினைத்தாய் = என்னினைத்தாய்.
மின் + நிறம் = மின்னிறம்.

(2) நிலைமொழி இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்டதாகவேனும், அல்லது இரண்டெழுத்துக்களால் அமைந்ததாயின் முதலெழுத்து நெடிலாகவேனும்இருந்து னகரமெய்யை யீற்றில் உடையதாக, வருமொழி முதலில் நகரமெய் நிற்குமானால், எல்லாத்தொடர்களிலும் முன்காட்டியபடி வருமொழி முதலில் உள்ள நகரம், னகரமாய்த் திரிவது மாத்திரமன்றி நிலைமொழி யீற்றிலிருக்கும் னகரமெய் கெட்டும் விடும்:—

ஊன் + நீங்கியது = ஊனீங்கியது.
மகன் + நலம் = மகனலம்.
வந்தான் + நம்பி = வந்தானம்பி.
ஏன் + நல்கினாய் = ஏனல்கினாய்.
மான் + நோக்கம் = மானோக்கம்.

குறிப்பு:— ணகர னகர மெய்களை யீற்றிலுடைய நிலைமொழி இரண்டு குறில்களா லமைந்தசொல்லாக, வருமொழி மொதலில் நகரமெய் வருமானால், இந்த நகரம்மாத்திரம் அந்த ணகர னகரங்களாகத் திரியும் என்றும்; மற்று, நிலைமொழி நெடிலோடு கூடிய இரண்டெழுத்துச் சொல்லாகவேனும், அல்லது இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆன சொல்லாகவேனும் இருக்குமானால், வருமொழி முதல் நகரம், ணகர னகர மெய்களாகத் திரிவதுடன், நிலைமொழி யீற்றில் நின்ற ணகர னகர மெய்களும் கெடும் என்றும் கூறினோம். இப்புணர்ச்சிகளை வேறொரு விதமாகவுங்கொள்ளலாம்:—

"நிலைமொழியிறுதியில் ணகர னகர மெய்கள்நிற்க, வருமொழி முதல் நகரமெய் கெடும்" என்று கூறுவோமானால் முன்சொன்னவிதிகள் அனைத்தும் இதனுள் அடங்கிவிடக்காணலாம்.ஏனெனில், நகரமெய் கெட, அதன்மேல் ஏறியிருந்த உயிர்மாத்திரம் நிற்குமாதலின், பின், நிலைமொழியிறுதியில் மெய்யும் வருமொழி முதலில் உயிரும் புணர்கின்ற முறைப்படி புணரப்பெறுமல்லவா. இவ்விதிகள், 6வது வால்யூம் (1933) 30, 31, 32வது இதழ்களில் கூறப்பட்டிருக்கின்றன:—

கண் + நீர் = கண் + ந் + ஈர் = கண் + ஈர் = கண்ணீர்.
தூண் + நடு = தூண் + ந் + அடு = தூண் + அடு = தூணடு.
அமண் + நாடு = அமண் + ந் + ஆடு = அமண் + ஆடு = அமணாடு.
என் + நினைவு = என் + ந் + இனைவு = என் + இனைவு = என்னினைவு.
மான் + நோக்கம் = மான் + ந் + ஒக்கம் = மான் + ஒக்கம் = மானோக்கம்.
அரசன் + நேமி = அரசன் + ந் + ஏமி = அரசன் + ஏமி = அரசனேமி.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—8. அரசியற் படலம்

[696-வது பக்கத் தொடர்ச்சி]

### சோகத்தாற் சோன்றாளச் சோல்

மூதனலைப்போ லல்லாமல், வாலியின்உயிர் நீங்கிய பின்னரே கம்பர் தாரையைஇந்தக்களத்தினுள் கொண்டுவருகின்றார். சுக்கிரீவனையனுப்பி அங்கதனை வல்லை வரவழைத்த வாலி தனது இன்னுயிர் மனைவி தாரையையுந் தருவிக்கநேர்ந்தானலன். நம்பினோரால் வஞ்சிக்கப்பெற்ற பேதைமையின் பரிபவம் மிகப்பெரிது. "தசரத ராமனென்பான் நின்தம்பிக்குத் துணை செய்யப் போந்துளனாதலின் நீசெருக்களஞ்சேரற்க" என்று கூசிக்கூசிக்கூறிய நல்லாள் தாரையை மறுத்து, தருமமோ ஒருபொழுதும் தன்னைத்தான் தவிர்க்காதென் றேமாந்து, பெண்மையாற் பிழைத்த அந்தப் பேதையை இகழ்ந்த இவ்வாலி, தானே செய்த பிழையால் பிழைக்காமற் போயதற்குச் சான்றாகி மருமத்தில் அழுந்திய அம்பினோடும் அவளது முகத்தைப் பார்ப்ப தெவ்வாறெனும், பரிபவம் அல்லாவிடினும், பரிவுதான் மீதூர அவளை வருவிக்கத் துணியாதவன் ஆயினன்போலும். "என்சொற் கேளாமல் நீ இக்கதி எய்தினையே" என்றவள் இயம்புவதைக் கேளாமுன் இறப்பதே நலம். அன்றியும், வாலி தன் மனைவியின்பால் வைத்திருந்தவொரு உள்ளன்பு அளப்பரியஆழமுடையது. மரணத்தறுவாயில் அவள்முகங் காண மனங் கொண்டிலன். அத்துணை அன்பு அவள்பால் வைத்திருந்த இவன், சுக்கிரீவனையும் அங்கதனையும் இராமனுக்கு அடைக்கலம் ஆக்கியதுபோல் அவளையும் பிறவிநோய்தீர்ந் துய்யும்படி செய்யாமை ஏனெனும் ஐய மெய்தலாம். ஒருகால், தன்னைத் தொழுதெழும் அப்பத்தினிக்கு இத்தேவனைத் தொழுவதும் மிகையென வாலி சிந்தித்திருத்தல் கூடும். எது எவ்வாறாயினும், உயிர்நீங்கிப் பிரியும் வேளையில், காதல் மனையாளும் காதலனும் கண்ணொடு கண்ணிணை நோக்குமப் பிரிவுப் பார்வை, ஆற்றமாட்டா அருந்துயர் விளைக்குமொரு காட்சியாதலின், கம்பர் அதனைக் காட்டாமலே இந்நாடகத்தை நடத்துவது நலமென்றெண்ணியதுந் தக்கதே. இவ்வாறே, தன் நாயகனை நினைந்ததும் மறந்ததும் இலாதநெஞ்சினள் அந்தக் கற்பிற் சிறந்த மண்டோதரியும் இராவணன் ஆவி அற்றபின்னர்த்தான் களத்தினுள் வந்து கதறலுற்றாள். வான்மீகர் நூலினுள், தாரை வந்தபோது வாலி உயிர்வைத்திருந்தனன்;ஆயினும் அவள் புலம்பலைக் கேளாவண்

ணம் உணர்வழிந்து கிடக்கலானான். இடையிற் சிறிது மூர்ச்சைதெளிந்தபோதும், தாரையைக் கண்ணுற்றானல்லன், அவள்பால் பரிவுமொழியேனும் பிரிவுமொழியேனும் யாதுங் கூறினானல்லன். வடநூலில் நிகழ்ந்தவாறு இது எவ்வாறென முதலிற் காண்போம்:

"ஐயனே, போரில் பயங்கரமானவனே, வீரனே, வானர சிரேஷ்டனே, உமக்கு யாதொரு குற்றமும் செய்யாதவளும் இப்போது வெகு பரிதாபமானநிலைமையிலிருப்பவளுமாகிய என்னிடத்தில் ஏன்பேசாமல் இருக்கின்றீர்? எழுந்திருந்து நல்ல ஒரு படுக்கையில்படுத்துக்கொள்ளும்; மன்னவர்கள் வெறுந்தரையில் இவ்விதமாகப் படுக்கமாட்டார்கள். பூபதியாகிய உமக்குப் பூமிதேவியினிடத்தில் அதிகம் பிரியம்போலும்; உயிர் துறந்து என்னை நீங்கியும் நீர் உமது உடலால் அவளைத் தழுவிக்கொண்டுகிடக்கின்றீரே. இந்தப்போர்புரியும்பொழுதே, நீர் சுவர்க்கலோகம்சென்றவுடன் வசிப்பதற்கென்று வேறொரு கிஷ்கிந்தாநகரத்தை அங்கு நிர்மாணம் செய்துகொண்டீர்போலும். மதுமணம் வீசுமிவ்வனங்களில் நான் உம்முடன் சுகமாகச்சஞ்சரித்து வந்ததெல்லாமின்றோடு முடிவடைந்துவிட்டது. யூகபதிகளுக்குள் சிரேஷ்டரான நீர் மாண்டதற்பின் நான் சந்தோஷமும் ஆசையும் நீங்கினவளாய்த் துயர்க்கடலில் ஆழ்ந்துவிட்டேன். என் இதயம் வெகுகடினமானது; ஏனெனில், என்னுடையநாயகனாகிய நீர் இவ்விதம் இங்குவிழுந்து மாண்டுகிடப்பதைக் கண்டும் அதுதான் துன்பம் மிகுத்து ஆயிரம்துண்டுகளாய்இப்பொழுது பிளந்துபோகவில்லை. சுக்ரீவனுடையமனைவியைக் கைக்கொண்டு அவனை ஊரைவிட்டுத்துரத்திய தீவினையின் பயனேயன்றோநீர் இப்பொழுது அடைந்திருப்பது? உம்முடைய நன்மையைநாடி நான்சொன்னஇதமான வார்த்தைகளைக் கேளாது என்னை நிந்தித்தீரே! நீர் இன்றைக்கு நல்லுருவும் இளமையும் உடைய தேவலோகத்துஅப்ஸரஸ்திரீகளுடையமனத்தைக் கவரப்போகின்றீர். உமக்குக் காலவிறுதி நேர்ந்ததென்பதில் சந்தேகமில்லை. அதனாற்றான் ஒருவருக்கும் தோற்காத நீர் இன்றுஇந்தச்சுக்கிரீவனுக்குத் தோற்றுமாண்டீர். இதற்குமுன் ஒருவிதமான துக்கத்தையும்அனுபவிக்காமலிருந்து, இப்பொழுது நாதன் இன்றி, கைம்மை, துக்கம், தாழ்வு இவைகளை நான் எங்ஙனம் சகிப்பேன்? இதுகாறும் யாதொரு கஷ்டமுமறியாமல் செல்வத்தில் வளர்ந்து லாலனை செய்யப்பட்டுவந்த என் குமாரனாகிய இவ்வங்கதன் அதிககோபங்கொண்டிருக்கும் சிறிய தந்தையாகிய சுக்கிரீவனாலே யாது பாடுபடுவானோ அறியேன்! குழந்தாய், தருமத்திலன்புள்ள உனது தந்தையார் முகத்தை இப்பொழுது நன்றாய்ப் பார்; இனிமேல் அவருடைய முகதரிசனம் கிடைப்பது முடியாது. நாதனே, நீர் இப்பொழுது நெடும் பிரயாணம் போகப்போகின்றீராதலால் உம்முடைய புத்திரனை உச்சிமோந்து சமாதானப்படுத்தி அவனுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லும். உம்மைக் கொன்று இராமர் பெரியதொரு காரியத்தைச் செய்தார். இதனால் சுக்கிரீவனுக்குச் செய்த பிரதிக்கினையை நிறைவேற்றினார். சுக்கிரீவ, உம்முடைய மனோபீஷ்டம் நிறைவேறிற்று. இனி நீர் உருமையைப் பெற்றுக்கொண்டு யாதொரு விக்கினமும் இன்றி இராச்சியத்தை யனுபவியும்: உமக்குச் சத்துருவாயிருந்த தமையனார் கொல்லப்பட்டார். நாத, உம்முடைய அன்பின் மனைவியான நான் இவ்வாறு கதறி யழவும் நீர் ஏன் ஒரு மறுமொழியும் கூறாதிருக்கின்றீர்? உம்முடைய மற்றைய மனைவிமார்களும் இதோ வந்து என்னைப்போலவே துக்கப்படுகின்றார்கள் பாரும்" என்று புலம்பினாள்.

இவ்விதமாய்த்தாரைபுலம்புவதைக்கண்டமற்றைமாதர்கள் வந்து அங்கதனை எடுத்து மடியின்மேல்வைத்துக்கொண்டு வெகுதுக்கத்துடன் அழுதார்கள். "தோள்வளைகளணிந்த வீரனே அங்கதனைவிட்டுநெடும்பிரயாணம் ஏன்போகிறீர்? உத்தமகுணங்களையுடைய உமதுசெல்வக்குமாரனாகிய அங்கதனை இவ்வாறுவிட்டுப்போவது யுக்தமன்று. அழகுள்ள நாதனே, நானாவது உமது குமாரனாவது உமக்குக் குற்றம் ஏதேனும் செய்ததுண்டோ? யாதுகாரணம்பற்றி என்னையும் அங்கதனையும் விட்டுத் தூரதேசம்போய்விடுகின்றீர்? நீண்ட கைகளையுடையானே, நான் ஏதேனும் குற்றம் செய்திருப்பின் அதைப் பொறுத்தருளவேண்டும். உம்முடைய பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றேன்" என்று குற்றமற்றஅத்தாரை மற்றுமுள்ளவானரப்பெண்டிருடன் வெகுபரிதாபமாகத் தனது கணவனருகில் நின்று கதறி, அவன் கிடந்தவிடத்திற்றானே தான் பட்டினிகிடந்துஉயிர் துறக்க நிச்சயித்தாள்.

அப்போது விண்ணினின்று விழுந்த விண்மீன்போலத் தரையிற்கிடந்ததாரையை வானரத்தலைவனாகிய அனுமன் கண்டு அவளைத் தேற்றுவானாயினான்.

"உயிர்கள்எல்லாம் அறிந்தும் அறியாதும் தாம் செய்த நல்வினை தீவினைகளினால் சுகதுக்கங்களை அடைகின்றன. நீவிர் உம்மைக் குறித்துத் துக்கப்படவேண்டியவராகவிருந்துகொண்டு மற்றொருவர்பொருட்டுத் துக்கப்படுவானேன்? நீவிரே ஏழையாயிருந்துகொண்டு மற்றோரேழையின் பொருட்டுப் பரிதாபப்படுவது யாதுகாரணம் பற்றியோ? நீரிலே குமிழிபோல நிலையற்ற இவ்வியாக்கை காரணமாக யார்பொருட்டு யார் துக்கப்படவேண்டியவர்களாயிருக்கிறார்கள்! இனி உயிரோடுள்ள உமதுகுமாரன் அங்கதனைப் பாதுகாத்து மற்றும் உம்மால் செய்யவேண்டிய காரியங்களைச் செய்தல் உமக்குத் தக்கது. உயிர்களுக்குப் பிறப்பு மிறப்பும் நிலையில்லாதன வென்பதைநீர் அறியீரோ? அறிவில்லாரைப்போல அழுவது உமக்குத்தக்கதுஅன்று. இகலோகத்திற்கு வேண்டிய காரியங்களை இனிச் செய்யவேண்டும். ஆயிரக்கணக்கான வானரர்கள் சூழவாழ்ந்த வாலியும் இன்று தன் வினையின்படி முடிவெய்தினர். அவர் அறநூலிற் கூறியபடி இராஜதருமத்தைநடத்தி, கொடுத்தல், இன்சொற் சொல்லுதல், பொறுத்தல், முதலிய நற்செய்கைகளிற் பயின்றுவந்தார். அவர் இப்போது தருமஞ்செய்தோர் சேரும் சுவர்க்கலோகத்தை அடைந்திருக்கின்றார். ஆதலால் அவர்பொருட்டுத் துக்கப்படலொழிக. நல்லாய், இங்குள்ள வானரசிரேஷ்டர்களும், இந்த அங்கத குமாரனும், இந்த வானர இராஜ்ஜியமும் எல்லாம் இனி உம்முடைமை யன்றோ? ஆதலால் இனிச் சோகத்தையும் தாபத்தையும் விட்டுவிடும்; உம்முடைய சொல்லின்படி அங்கதன் அரசாளட்டும். புத்திரர்களாற் செய்யப்படவேண்டுமென்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டு இருக்கின்ற சடங்குகளெல்லாவற்றையும் இப்பொழுது அங்கதன் வானரவேந்தன்பொருட்டுச் செய்யட்டும். அந்திய கருமங்கள் செய்யவேண்டிய காலம் இதுவே; அவைகள் செய்தாயின பின் அங்கதனுக்கு முடிசூட்டும். பின்பு உமது புத்திரனைச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கக்காண உமக்குத் துக்கம் ஆறிவிடும்."

இந்த வார்த்தைகளைக் கணவனை யிழந்த துன்பத்தால் வருந்துந் தாரை கேட்டு, தன் அருகில் நின்ற அனுமானைப் பார்த்து "அங்கதன்போன்ற நூறு குமாரர்களை உடையவளா யிருத்தலினும் இங்கு மாண்டுகிடக்கின்ற வீரனாகிய என் நாயகனோடு உயிர் துறப்பதே எனக்கு மேலான காரியம். என்னுடையநாயகனுக்குச் செய்யவேண்டிய பிரேதக



மங்களைச் செய்விப்பதற்காவது, அங்கதனுக்கு முடிசூட்டுதற்காவது யான் உரியளல்லேன். அந்தக் கடமைகளெல்லாம் அங்கதனுக்குச் சிற்றப்பனான சுக்கிரீவனைச் சேர்ந்தவை. ஐய அனுமானே, நான் இந்த இராச்சியத்தை அங்கதனுக்குக் கொடுக்கவேண்டுமென்று நீர் எண்ணுவதைவிட்டு இந்தக்காரியத்தில் பிள்ளைக்குப் பந்துவாயுள்ளவன் தந்தையே அன்றித் தாயல்லள். எனக்கு என்கணவனைப் பின் தொடர்வதை விட இம்மையிலாவது மறுமையிலாவது நன்மை தருவது வேறொன்றுமில்லை. இதோ மாண்டுகிடக்கும் என் நாயகன் படுக்கையே எனக்கும் ஏற்றது" என்று கூறினாள்.

மரணதசையை யடைந்த வாலி மூர்ச்சை தெளிந்து, கண் விழித்து, மெதுவாக மூச்சுவிட்டு, நான்குபக்கங்களிலும்பார்த்து, தன்முன் நிற்குஞ் சுக்கிரீவனைக் கண்ணுற்று, தெளிவான வார்த்தைகளால் அவனைத் தன்னருகில் வரவழைத்து, அவனுக்கும் அங்கதனுக்கும்அன்போடு நல்லுரைகள் கூறியபின் உயிரை விட்டான்.

பின்பு தாரை, இறந்துகிடக்கின்ற வானரவேந்தனாகிய தன் நாயகனது திருமுகத்தைமோந்து அவனை விளித்து "வீர, என்சொல்லைக் கேளாமையால் அன்றோ, நீர் பருக்கைக் கற்களையுடையதும் மேடும்பள்ளமுமாயதுமான இவ்வனிலத்தில் கிடக்கின்றீர். வானரர்கோமானே, என்னைப்பார்க்கிலும் உமக்கு இந்தப்பூமி அன்பினள்போலும்! ஏனெனில் என்னை உவந்தேற்றுக்கொள்ளாமல் நீர் அவளையே தழுவிக்கொண்டு கிடக்கின்றீரே! காதல, தெய்வமும் சுக்கிரீவன்பக்கலி லிருக்கின்றதே! இது என்ன அதிசயம்! இனிமேல் அவனன்றோ வீரனாக மதிக்கப்படுவான். உமது தொழும்புபுரியும் குரங்குகளும் கரடிகளும் அங்கதனும் நானும் புலம்புவதைக் கேட்டும் நீர் ஏன் எழும்பாது இருக்கின்றீர். உம்மாற் கொல்லப்பட்டு உமது பகைவர்கள் விழுந்துகிடந்த அச்சேக்கையிலேநீர் இப்பொழுதுமாண்டு கிடக்கின்றீரே. நல்லகுலத்தில் பிறந்தவரே, போரில் பிரியமுள்ளவரே, என் காதலரே, என்னைக் கைம்மையாக்கி நீர் எங்குப் போயினீர்? இனி உலகத்தார் தங்கள் பெண்களை ஒருபோதும் வீரர்களுக்கு விவாகம்செய்துகொடாதொழிவாராக; ஐயோ! வீரனுக்குப் பெண்டாகிய நான் இதோ கணப்பொழுதில் கைம்பெண்ணானேனே! என் மானம் அழிந்தது, இன்பம் தொலைந்தது! நானும் துன்பக் கடலில் ஆழ்ந்துவிட்டேன். ஆ! என் கணவன் இறக்கக் கண்டும் எனதுகன்னெஞ்சம் நூறு நூறு துண்டுகளாகப் பிளவாதிருக்கின்றதே! என் அன்ப, என் காதல் நாயக, வீர, நீர் போரில் மாண்டு கிடக்கின்றீரே! கணவனை யிழந்தவளுக்குப் பிள்ளையிருந்தென்? பெருஞ்செல்வமிருந்தென்? அவளை உலகத்தார் ஓர் கைம்பெண் என்றுதானே கூறுவார்கள்! இந்திரகோபம் போன்ற சிவந்த பட்டினாற் செய்யப்பட்ட உமது படுக்கையிற்போலவே, உமது உடலிலிருந்து பெருகும் இந்தஇரத்தவெள்ளத்திற் கிடக்கின்றீரே. உம்முடைய தேகம் முழுவதும் இரத்தம் தோய்ந்து புழுதிபடிந்திருத்தலினால் உம்மைக் கையால் தழுவ எனக்கு இயலாதிருக்கின்றதே. இராமர் விடுத்த ஒரேபாணத்தால்இன்று சுக்கிரீவனுடைய பயமும் போய் அவனுடைய எண்ணமுமெல்லாங் கைகூடின. நீர் இறந்து சுவர்க்கமடையவும் உமதுமார்பில் தைத்திருக்கின்ற இவ்வம்பினால் நான் உம்மைத் தழுவமுடியாமல் வாளா பார்த்திருக்கின்றேனே" என்று புலம்பினாள்.

அதுகேட்டு நீலன் மலைமுழைஞ்சில் புக்க ஒருசர்ப்பமே போலவாலியின்மார்பில்பாய்ந்திருந்தபாணத்தைப்பிடுங்கி எடுத்தனன். அப்போது அந்தப்பாணம் அஸ்தமன கிரியிலுள்ள சூரியனது சிவந்த கிரணத்தைப்போல விளங்கிற்று. மலையினின்று பெருகும் செந்தாதுகலந்த நீர்போல வாலியினுடைய உடலினின்றும் இரத்தவெள்ளம் தாரைதாரையாக ஓடிற்று. இவ்வாறு அம்பு தைத்து, கொலையுண்டு, இரத்தந் தோய்ந்து, புழுதிபடிந்து கிடக்கின்ற தனது கணவனின் உடலைத் தாரை தன் கண்ணீரினால் கழுவி, அழுது சிவந்திருக்கின்ற கண்களையுடைய தனது குமாரன் அங்கதனைநோக்கி "உன் தந்தை படுகின்ற பயங்கரமான மரணாவஸ்தையைப்பார். அவரது பாவச்செயல்களால்நேர்ந்தஒரு பகையின்முடிவாம்இது. மகனே, இளஞாயிறுபோன்றஒளியுள்ள உடலையுடையவரும், எக்காலமும் அளவற்ற பெருமை யளிப்பவருமான உனதுகோத்தந்தை யமலோகம் செல்கின்றாராதலின், அவரைப்பணிவாயாக" என்றாள். தாரை அவ்வாறு சொல்லவும் அங்கதனெழுந்து "அடியேன் அங்கதனேன்" என்று சொல்லிக்கொண்டு தனது தந்தையின் பாதங்களைத் தனது கொழுங் கைகளால் கட்டிக்கொண்டான். அப்போது தாரை, "உம்மை வணங்குகின்ற அங்கதனை முன்போலப் பல்லாண்டு கூறி ஏன் வாழ்த்தாதிருக்கின்றீர்? சிங்கஏற்றாற் கொல்லப்பட்ட எருத்தின் பக்கலில் நிற்கின்ற ஒரு பசுவும் கன்றும் போல நானும் உமதுகுமாரனங்கதனும் உயிர் துறக்கும் உமதுபக்கலில் நிற்கின்றோம். உமது போர் வேள்வியின் முடிவில், உமது தருமபத்தினியான என்னைவிட்டு, நீர் மாத்திரம் எப்படி இராமருடைய அஸ்திர கங்கையில் அவபிருதஸ்நானம் செய்தீர்? உமது போர்வலியைக்கண்டுசந்தோஷமடைந்த தேவேந்திரனால் உமக்குக் கொடுக்கப்பட்ட காஞ்சனமாலையைக் காணேனே! அதன் காரணமென்ன? பெருமையிற் சிறந்தோய், சூரியன் மறைந்தபொழுதும்அவனுடைய ஒளி மேருமலையைவிட்டுஅகலாததுபோல, நீரிறந்துபோயும் உம்மைராஜலக்ஷ்மி விட்டகலவில்லை. நான் சொன்ன நல்லசொற்களை நீர் கேட்கவுமில்லை; உம்மைத்தடுக்கவு மென்னால் முடியாமற் போய்விட்டது. இப்போது நானும் என் குமாரனும் போர்க்களத்தில் பட்ட உம்மோடு இறந்தவர்களானோம். லக்ஷ்மியும்என்னை மெய்யாய் விட்டு நீங்கிவிட்டாள்" என்று கூறினாள்.

உத்தம மனைவியொருத்தியின் உள்ளத்தில் புரண்டெழுந்த மெய்க்காதல் வெள்ளமாகப் பாய்கின்றன இவ்வாசகங்கள். நிந்தனைமொழிகள் போல் நிற்கின்ற சிற்சில சொற்களும் அவளது அன்பின் வேகத்தைக் காட்டுமேயல்லாமல்அதன் தணிவைத் தெரிவிக்காது என்றே வான்மீகிமுனிவர் கொண்டனர் என்று நாம் எண்ணல்வேண்டும். "என்சொற் கேளாமையாலன்றோ நீ இங்ஙனம் கிடக்கின்றாய்" என்பதைக் கூறி, வாலியின் உயிர்நீங்கிய பின்னரே இடித்துக் காட்டுகின்றாளாதலின், அதனில் யாதும் கார்ப்புக் காணலரிது. ஆயினும், தம்பியின் மனைவியை வெளவினான் என்னுங் குற்றத்தை எடுத்துக் கூறியதும், அவன்து பாவச் செயல்களால் நேர்ந்த முடிவு இது என்று அங்கதனுக்கு எடுத்துக் காட்டி அறிவுறுத்தியதும் ஒரு மனைவியால் முயன்றிருக்க வேண்டா என்னச் சிலர் எண்ணினும் அமையும். மற்று, தாரையின் அன்பும் பெரியது, என்பதை உன்னி இன்ன சொற்களையும் பொறுக்கலாம்.

199195

# இ ர த் ந ா வ ளி

[703-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 2. களம் 1.

இடம்:—அரண்மனையைச் சூழ்ந்த நந்தவனம்.
நாகணவாய்ப் பறவை யொன்றைக் கூண்டில்
கொண்டு ஸுஸங்கதை வருகின்றாள்.

ஸுஸங்கதை:—எங்குப் போயினள் ஸாகரிகை? இப்பறவையை என்கையில் கொடுத்துவிட்டு எங்குச் சென்றாளோ, அறியேனே. இதோ நிபுணிகை வருகின்றாள்.

[வாஸவதத்தையின் பணிப்பெண்களில் ஒருத்தியாகிய நிபுணிகை வருகின்றாள்.]

நிபுணிகை:—அரசன் சொன்ன செய்தியை அரசியின்பால் தெரிவிப்பதற்கு நான் விரைதல்வேண்டும்.

ஸுஸங்கதை:—என்னவிது நிபுணிகா; என்னைக் காணுதாள்போல் செல்லும்படி உன் நினைவையெல்லாம் இப்பொழுது கவர்ந்துகொண்டிருப்பது எதுவோ! என்ன இத்துணை வேகம்? எங்குச் செல்கின்றாய்?

நிபுணி:—சொல்கின்றேன். ஸ்ரீபருவதத்திலிருந்தும் மாபெருமுனிவர் ஸ்ரீகண்டதாஸர் நம் அரண்மனைக்கு வந்திருக்கின்றார். எம்மலரும் எந்தப் பருவத்திலும் விரும்பியபடி மலர்கின்ற மந்திரத்தை அவர் நம் அரசனுக்குக் கொடுத்துளர். நமது மன்னவன் தான் கற்ற இப் புதியகலையைத் தான் அருமையாய் வளர்க்கும் அம்மல்லிகைச்செடியின்மீது சோதித்துப்பார்க்கப் போகின்றான். நமது அரசியையும் அங்கு வருதற்கு வேண்டிக்கொள்ளும்படி என்னை யனுப்பியிருக்கின்றான். எங்குச் செல்கின்றாய் நீ?

ஸுஸங்:—ஸாகரிகையைத் தேடிச் செல்கின்றேன்.

நிபுணி:—இவ்வழிச் சென்றாளவள். சித்திரம்வரைதற்குரிய துகிரிகை முதலிய அவள்கையி லிருந்தன. அவள் வாழைச் சோலையை யெய்தக் கண்டேன். அவ்விடத்தே அவளை நீ காணலாம், நிச்சயம். நம் தலைவியின்பால் ஏகவேண்டும் நான்.

[செல்கின்றனர்]

களம் 2.

இடம்:—ஓர் வாழைச்சோலை.
ஸாகரிகை, ஒரு சித்திரப் படத்தினைக்
கையிற்கொண்டு வருகின்றாள்.

ஸாகரிகை:—மடநெஞ்சே, சும்மாவிரு. நினது ஆசைக்கு எட்டமாட்டா உயரத்திருக்கும் ஒருவன் பொருட்டு வறிதே நீ துடிப்பதால் யாது பயன்? ஒரு முறை காணவே இத்துணை வருத்திக் கலக்குகின்ற அவ்வுருவினை மீண்டுங் காணுதற்கு ஏனோ நீ இங்ஙனமவாவுகின்றாய்? கொய்யை நீ, நன்றியுமற்றனை. பிறந்த நாள்தொட்டுப் பழகியுள்ள இம்மார்பினை விட்டுச்சென்றுவேறோர் தஞ்சம்தேடிக்கொள்வதுனைக்குத்தகுமோ! ஏ! ஏ!! உன்னைப் பழிப்பது அழகன்று. அனங்கன் எய்யுங் கணைகளுக் கஞ்சியன்றோ நீ இங்ஙனம் ஓடுகின்றாய்.—உன்பொருட்டு அவனையே இரங்கும்படி வேண்டிக்கொள்கின்றேன். பூஞ்சிலைப் பெரும, அசுரரையும் [illegible] வெற்றிகொண்ட கொற்றவ! மெ[illegible] ஏழை [illegible] நாள்மீது நின் வலியினைச் [illegible] நாணுகின்று [illegible]யே. அல்லது, உன் அங்கமுடன் அறிவினையும் அன்றே உகுத்துவிட்டனையோ? ஐயகோ, இனி நான் உயிர் சுமந்திருக்கலாற்றேன். (படத்தைப் பார்த்துக்கொண்டு) என் இன்னுயிர்க்கு இறுதிகாண நிற்பதும் இதுவே. யாரும் இங்கு வரக்காணேன். ஆதலின் இச்சித்திரத்தை இப்பொழுதே தீட்டி முடித்தல் நலம். (படத்தைப் பார்த்துக்கொண்டு) என் இதயம் எழுந்து துடிக்கின்றது; நடுங்கும் என் விரல் எனினும் சித்திரத்தை வரைந்து முடித்து இத்திருவுருவம் என் கண் விட்டகலாமல் காக்கின்றவளாவேன்.

[வரைகின்றாள்]

ஸுஸங்கதை வருகின்றாள்.

ஸுஸங்கதை:—இதுதான் வாழைச்சோலை, ஹா! இதோ இருக்கின்றாள். சித்திரம்வரைவதில் தன்கருத்தெல்லாம் செலுத்தியிருக்கும் அவள், நானிங்கு வந்திருப்பதை அறிந்திலள். எவ்வுருவம் தீட்டுகின்றாள்? (மெல்ல வந்து மறைந்து பார்க்கின்றாள்) என்னவிது! அரசனது உருவம்! நன்று செய்தனை, ஸாகரிகா, தாமரைத் தடத்தைவிட்டு வேறெங்கும் விளையாடச்செல்லுமோ அரசவன்னம்!

ஸாகரிகை:—முடிந்தது. ஆயினும், அதனைக் காணமாட்டாமல் கண்ணீர் பெருகி எனது பார்வையை மறைக்கின்றதே (தலை நிமிர்கின்றாள். ஸுஸங்கதையைக் கண்டு படத்தை மறைத்துக்கொள்கிறாள்.) ஸுஸங்கதா, வா இங்கு.

ஸுஸங்:—(ஸாகரிகைக்கருகமர்ந்து படத்தைக்காட்டி) நீ வரைந்திருக்கும் இது யார்?

ஸாகரிகை:—இத்திருவிழாவின் தெய்வம், அனங்கன்.

ஸுஸங்க:—இச்சித்திரத்தில் நின் கைத்திறத்தை நன்கு காட்டியுள்ளாய், ஆயினும் அது நிறைவடைய இன்னொரு உருவம் குறையாயிருக்கின்றது. மற்று என் கையிற் கொடு. இக்கடவுளுக்கு அவன் மனைட்டியை அளிக்கின்றேன். (வரைகின்றாள்)

ஸாகரி:—(வெகுண்டு) ஓஹொ, ஸுஸங்கதா, என்னவிது! என் படிவத்தைத் தீட்டினையே!

ஸுஸங்:—காரணமின்றிக் கனலாதே. உன் காமதேவனுக்கு எனது இரதியைக் கொடுத்திருக்கின்றேன், அவ்வளவே. போதும் போதும்! உன் வேடத்தை விட்டொழித்து உண்மையைச் சொல்.

ஸாகரி:—(ஒரு புறமாய்) இவளுக்கு என் இரகசியந் தெரிந்துவிட்டதே. (அவளை நோக்கி) என தருமைத் தோழி, நாணம் மீதூர்ந் தென்னை நலிகின்றது-இந்த என் சபலத்தை யாருக்கும் தெரிவிப்பதில்லையென்று எனக்கு வாக்குக் கொடு.

ஸுஸங்:—நாணுவானேன்! பெருந்தகை உறவினைத் தேடிக்கொள்ளல் உன் இயற்கை மேன்மைக்கு ஏற்றதாகவே இருக்கின்றது. ஆயினும் நான் உன்னைக் காட்டித்தரமாட்டேன். பேசியது பிதற்றும்பறவையோ ஒருகால், நமதுசம்பாஷணையை வெளிப்படுத்திவிடலாம்.

ஸாகரி:—ஐயகோ, உடலும் உயிரும் பதைத்துச் சோர்கின்றேன்.

ஸுஸங்:—பதைத்தலொழி, அமைதிகொள். இத் தண்ணீர்த் தடத்தினின்று அல்லியின் தண்டும் இலையும் கொணர்வேன். (அல்லியிலைகளைக் கொணர்ந்து ஸாகரிகையின் மார்பின்மீது வைத்துத் தண்டினால் கட்டுகின்றாள்)

ஸாகரி:—தோழீ, போதும். இவ்விலைகளையுந் தண்டுகளையும் நீக்கிவிடு; எனது துன்பத்தைத் தீர்க்கா அவை; எனது நம்பிக்கை நிமிரமாட்டாஉயரத்தில் என் இதயத்தை நிறுவியுள்ளேன். நாணம் தலைக்கொள்கின்றது—ஆசைக்கு அடிமையாயினேன்—என் காதலுக்குக் கைம்மாறில்லை—மரணமே எனக்குத் தஞ்சம். (மூர்ச்சையாகின்றாள்)

[“குரங்கு சங்கிலியை அறுத்துக்கொண்டு மாதர்களைத் துரத்துகின்றது, விலகுங்கள், விலகுங்கள்” என்ற ஆரவாரம் கேட்கின்றது]

ஸுஸங்:—எழுந்திரு, எழுந்திரு, என தருமைத் தோழீ, எழுந்திரு. அக்கொடிய விலங்கு இவ்வழி வருகின்றது.

ஸாக:—என் செய்வோம்?

ஸுஸங்:—தமாலச்சோலையின் நிழலில் ஒளித்துக் கொள்வோம்? வா, வா, வந்துவிட்டது குரங்கு.

(போகின்றனர்.)

களம் 3.

இடம்:—நந்தவனத்தின் மற்றொரு பாகம்.
ஸாகரிகையும் ஸுஸங்கதையும்
வருகின்றனர்.

ஸாகரி:—சித்திரம் யாதாயிற்று. அவ்விடத்தே விட்டுவிட்டாயோ? யாரேனு மதனைக் கண்டுவிட்டால்!

ஸுஸங்:—படத்தைப்பற்றி இப்பொழுதொன்றும் நீ கவலை கொள்ளாதே. சங்கிலியைப் பிய்த்துக் கொண்டு வந்த அக்குரங்கு தயிரும் சோறும் தின்றுகளித்து, நாகணவாய்ப் புள்ளின் கூட்டைத் திறந்து பறக்க விட்டுவிட்டது. அப்பறவையை நாம் தேடிப் பிடிக்கவேண்டும்; இல்லையேல் நாம் பேசியதையெல்லாம் சொல்லிவிடும்.

[‘ஆச்சரியம் ஆச்சரியம்’ என்றோர் குரல் உள்ளிருந்து கேட்கின்றது.]

ஸாகரி:—ஹே, ஸுஸங்கதா, குரங்குதான் வருகின்றதோ?

ஸுஸங்:—இல்லை, பேதாய், நம் மன்னவன் நண்பன் வஸந்தகனது குரல் அல்லவோ அது. வா போவோம், நெடுந்தூரம்பறப்பதன்முன் அப்பறவையைப் பிடித்துவிட வேண்டும்.

(போகின்றனர்.)

வஸந்தகன் வருகிறான்.

வஸந்:—என்ன ஆச்சரியம் இது! ஸ்ரீகண்டதாஸரின் மந்திரசக்தி அதிகமும் ஆச்சரியமாக இருக்கின்றதே. அவர் தம்மனத்தினால் நினைத்தவளவில், அரசி அருமையாய் வளர்க்கின்ற மாதவிக் கொடியைப் பரிகசித்துச் சிரிப்பதுபோல், அம்மல்லிகைச்செடி எண்ணற்ற அரும்புகொண்டு நிறைந்ததே. நிகழ்ந்ததைச் சென்று நான் என் அரசனுக்குச் சொல்வேன். ஹா, அதோ வருகின்றான். அவன் கண்கள் உவகையால் மிளிர்கின்றன. சென்று நானவனைச் சேர்வேன்.

(போகின்றான்).

களம் 4.

இடம்:—நந்தவனத்தின் வேறோர் இடம்.
வத்ஸராஜன் வருகின்றான்.

வத்ஸ:—என் தேவியையான் சினத்தினால் விளர்க்கச் செய்வேன். அரும்பு கொண்டு என் மல்லிகைச் செடி தென்றலோ டிணைந்து அசையும்போது, அதன் அழகிற்குத் தான் தாழ்வளோவென அஞ்சுவாள்.

[வஸந்தகன் வருகிறான்.]

வஸந்:—கொற்றவா, வழிவழி சிறக்க நின்வெற்றி! அதிர்ஷ்டம் நல்லதாக இருக்கின்றது.

வத்ஸ:—நண்பா, அதற்கு ஐயமில்லை. மணிமந்திர ஔஷதங்களுக்கு இருக்கும் சக்தி ஆச்சரியமானது. வா, நம் மல்லிகைச்செடியைச் சென்றுநோக்கி, இதுகாறும் அவாவியிருந்த நல் விருந்தினை இக்கண்கள் அருந்தட்டும்.

வஸந்:—இவ்வழி.

வத்ஸ:—செல்.

வஸந்:—(சிறிது முன் சென்று) ஐயனே, ஓடு ஓடு, ஓடிப்போ.

வத்ஸ:—ஏன்?

வஸந்:—அம் மாதுளைமரத்தில் ஒரு பூதம் இருக்கின்றது.

வத்ஸ:—அசடே, அஞ்சாதே செல். இந்தப் பருவத்தில் எந்தப் பூதந்தான் என்ன தீங்கு செய்யும்?

வஸந்:—மிகத் தெளிவாகப் பேசுகின்றது. நம்பாயேல், நீயே வந்து கேள்.

வத்ஸ:—(முன் வந்து) தெளிவாகவு மிருக்கின்றது, இனிமையாகவு மிருக்கின்றதே அந்தக் குரல். மாதொருத்தியின் மழலை போன்றிருக்கின்றதே. நாகணவாய்ப் புள்ளோ! (மேல் நோக்கி) ஆம், அங்கு உட்கார்ந்திருக்கின்றது.

வஸந்:—நாகணவாய்ப்புள்ளா?

வத்ஸ:—(சிரித்துக்கொண்டு) பார் அங்கு; நாகணவாய்ப்புள்தான்.

வஸந்:—ஆகையால் அரசே, உன்னுடைய பயமானது, ஓர் புள்ளைப்போய் ஒருபூதமென என்னை மயங்கச் செய்தது.

வத்ஸ:—சீ, போ, அசடே. நீ செய்த பிழையை என் தலையில் சுமத்துகின்றாயா!

வஸந்:—நல்லது, என்னைத் தடுக்காமல் சற்றே சும்மாவிரு. (தன் கைத்தடியை ஓங்கி) ஏ, துஷ்டப்பறவையே, நான் ஒரு பிராமணன் என்கிற மரியாதையில்லையா உனக்கு: இருக்கின்ற இடத்திலே இரு பார்ப்போம்; ஓரே அடியில் இத்தடியால் உன்னைத் தரையில், விளம்பழம் உதிர்ப்பதுபோல், வீழ்த்திவிடுகின்றேன், பார்.

வத்ஸ:—துறத்தாதே, துறத்தாதே; எத்துணை யழகாய் அப்பறவை பேசுகின்றது, கேள்.

வஸந்:—ஆம், இந்தப்பிராமணனுக்குப்போஜனம் செய்துவை என்கின்றது, அது.

வத்ஸ:—போஜனம் செய்துவை, போஜனம் செய்துவை? பெரு வயிறுடையோர் பாடும் பல்லவியெல்லாம் இதுதான்.

வஸந்:—(உற்றுக்கேட்டு உரைக்கின்றான்) “நீ வரைந்திருக்கும் இது யார்...காரணமின்றிக் கனலாதே... உன் காமதேவனுக்கு எனது இரதியைக் கொடுத்திருக்கின்றேன்”...ஹேஹெ! என்னவோ இதன் பொருள்?

வத்ஸ:—யாரோ வொரு மாதராள் தன்து காதலனது படிவத்தைத் தீட்டி, காமக்கடவுளென்று அதனைத் தன்தோழிக்குக்காட்டியிருத்தல்வேண்டுமென

எண்ணுகின்றேன்: அந்தத் தோழி இரகசியத்தைத் தெரிந்துகொண்டு, காமன் மனுட்டியென்று அம்மா தின் உருவத்தையே அயலில் தீட்டினுள்போலும்.

வஸந்:—இருக்கலாம்.

வத்ஸ:—கேள், மீண்டும் பேசுகின்றது.

வஸந்:—(உற்றுக்கேட்டு உரைக்கின்றான்). "நானு வானேன், பெருந்தகை உறவினைத் தேடிக்கொள்ளல், உன் இயற்கை மேன்மைக்கு ஏற்றதாகவே யிருக்கின்றது."

வத்ஸ:—இருக்கலாம், இருக்கலாம்.

வஸந்:—உன்னுடைய கல்வித்திறமையை இத்துணைக் காட்டவேண்டா. இந்தப் பறவை பேசிமுடிந்ததும், நானே அதன் பொருளை விளக்குவேன்—இந்த வனிதை வனப்பு மிகவுடையவள்.

வத்ஸ:—அதனைப் பின்னர்ப் பார்த்துக்கொள்வோம். முதலில் இது சொல்வதைக் கேட்கலாம்.

வஸந்:—நல்லது; சொல்வதைக் கேட்டாயா: "இவ் விலைகளையுந் தண்டுகளையும் நீக்கிவிடு, என் துன்பத்தைத் தீர்க்கா, அவை."

வத்ஸ:—கேட்டேன், எல்லாம் விளங்கியது.

வஸந்:—இந்தப் பறவை இன்றைக்கு என்ன பேச்சுப் பேசுகின்றது! இருப்பினும் இது சொல்வதற்கெல்லாம் என்னுல் பொருளுரைக்க முடியும்.

வத்ஸ:—முடியலாம், முதலிற் கேள்.

வஸந்:—நான்மறை வல்ல அந்தணன்போல் இது சந்தத்திலல்லவோ பேசுகின்றது.

வத்ஸ:—யாது சொல்லியது, நான் கேட்கவில்லை.

வஸந்:—"எனது நம்பிக்கை நிமிரமாட்டா உயரத்தில் என் இதயத்தை நிறுவியுள்ளேன்—நாணந்தலைக் கொள்கின்றது. மரணமே யெனக்குத் தஞ்சம்"

வத்ஸ:—உன்னைத்தவிர எந்த அந்தணன் இதனைச் சந்தத்தில் பேசுகின்றதென்று கூறுவான்.

வஸந்:—வேறென்னவிது?

வத்ஸ:—வசனம்.

வஸந்:—வசனமா! நல்லது, அதன் பொருள் என்ன?

வத்ஸ:—தன் காதல் கைகூடுமோ என்னுஞ் சங்கையால் ஓர் இளநங்கை தன் உயிரையே வெறுத்து இவை உரைத்தாளெனக் கொள்ளலாம்.

வஸந்:—(உரக்கச் சிரித்து) இந்தச் சித்திரப் பேச்சுக்களையெல்லாம் விட்டுவிடலாமே. "தன் காதலை நான் ஏற்றுக்கொள்வேனே என்று அம்மங்கை சங்கை கொள்கின்றுள்" என்று நீ இப்பொழுதே சொல்லிவிடலாமே. உன்னையன்றி வேறுயாரையே, கரும்புவிற் காமனுக வரைந்திருத்தல் கூடும். (கை தட்டிச் சிரிக்கின்றான்)

வத்ஸ:—அசடே, சும்மாவிரு. நின் களிப்புமிகு குரலிற்கஞ்சி அப்பறவை ஓடிவிட்டது.

வஸந்:—வாழைச் சோலையில் சென்றமர்கின்றது; வா அங்கு நாம் செல்வோம்.

வத்ஸ:—காமன் கணைகளால் வருந்திய அம்மெல்லியல்மாதராள் தன் இதயத்தின் துன்பத்தைத் தோழிக் குரைக்கின்றுள்: அதனைக் கற்று வந்து இந்நாகணவாய்ப்புள் கூறிவிட, பாக்கியம் புரிந்தோர் செவிகளுக்கு அம்மொழிகள் நல்விருந் தாகின்றன.

(போகின்றனர்)

## கழையோடைக் கண்ணகி

### வருகைப் பத்து

திங்கட் பிளவும் முழுமதியும்
சேலுங் கயலுஞ் செம்பவளந்
திகழ்வெண் மணியும் பிறைபுரையுந்
திலத நுதலுந் திருமுகமும்
வெங்கட் கலியும் மிருபிணியும்
வீட்டும் விழியுந் திருவாயும்
விரவு மிருளும் நெஞ்சகமும்
விளங்க வுதிக்கும் நகைநிரையும்
தங்கக் கடக மணிச்செங்கைத்
தருவும் சேர விளங்கோவின்
தமிழுக் கொருநற் பெயருதவுந்
தண்டைத் தாளுங் காண்பதற்குச்
சங்கத் திரள்சூல் கொண்டேறித்
தரளத் திரளீன் சாலிவயற்
றண்ணென் சோலைக் கழையோடைத்
தாயே வருக வருகவே. 1.

ஆகா வெப்ப முடலாற
அவனி வெயிலின் சூடாற
அல்ல லுழந்த மன்னுயிர்கள்
அனைத்தும் வயிற்றுத் தீயாறப்
போகா விரவுத் தொழிலாறப்
பொல்லா வறுமைத் துயராறப்
புதுநெல் லமுதும் தயிர்பாலும்
பூரித் தெங்கும் பரிமாற
ஏகா திரைதேர் செம்பருந்தும்
இன்சொற் கிளியும் பகையாற
இனமுந் நிரைகள் நடையாற
எலியும் பாம்பும் விளையாடச்
சாகா வமுதப் புனன்மேகந்
தந்து வந்து களையாறுந்
தண்ணென் சோலைக் கழையோடைத்
தாயே வருக வருகவே.

நீலக் கோல விதானத்து
நிரைவெண் டரளப் பந்தரிலே
நிறைபொற் குடமும் பாலிகையும்
நிமிர்பொற் சோதி மணிவிளக்கும்
பாலைப் புரையுங் கவரிகளும்
பலமங் கலமுங் கையேந்திப்
பண்ணைப் புரையுந் தூமொழியார்
பரவிப் பணிசெய் தருகுவர
மாலைக் காமுங் காதளவும்
வந்து போகும் மணிவிழியும்
மதிசேர் முகமுந் தளர்நடையு
மாக வந்த மணக்கோலஞ்
சாலக் கண்கண் டுளமகிழத்
தவிராச் சிறுமைப் புரிநெகிழத்
தானே தோன்றுங் கழையோடைத்
தாயே வருக வருகவே.



மலையிற் பிறவா மாமருந்தே
மலரிற் பிறவா நறுமணமே
வானிற் பிறவா முழுமதியே
வண்டிற் பிறவாச் செழுந்தேனே
அலையிற் பிறவாத் தெள்ளமுதே
அரவிற் பிறவா மாமணியே
அதனிற் பிறவாப் பேரொளியே
அன்பே யென்று சீராட்டுங்
கலையிற் பிரியாக் கோவலன்முன்
கண்கள் குளிர வுளம்வெதும்பக்
காட்டி நின்ற மணக்கோலங்
காணக் கொண்டோம் பேராசை
தலையிற் பிரியாக் கற்புடையார்
சரணஞ் செய்யும் பெருமாட்டி
சாலிப் பழனக் கழையோடைத்
தாயே வருக வருகவே. 4.

வாழ்ந்த செல்வ மனைவிட்டு
வருந்திப் பெற்றோர் தமைவிட்டு
மாயா நிதியம் முழுவதுவும்
வஞ்சக் கணிகை வசம்விட்டு
ஆழ்ந்த கவலை யுடனுன்னை
அடைந்த கணவன் முகநோக்கி
ஐயா சிலம்பொன் றுளதென்ன
அதுவே முதலாய்ப் பொருளீட்டச்
சூழ்ந்து கண்ணே யாருயிரே
தோகாய் வருக வெனவெழுந்து
தோன்றல் பின்னே நள்ளிருளில்
துணிந்து நடந்த பொற்கோலம்
தாழ்ந்து வணங்க மனங்கொண்டோம்
சரணம் சரணம் பெருமாட்டி
தவறு தீர்க்குங் கழையோடைத்
தாயே வருக வருகவே. 5.

கன்னிப் பொருநைத் திருநாடன்
கள்வ னென்று பழவினையால்
கருதா தந்தோ தீங்கிழைப்பக்
கதிரோன் றன்னைக் கரிபோக்கி
மன்னிப் போதத் தரணியிலே
வந்து தோலா வழக்காடி
மதுரை யெரித்த திருக்கோலம்
மணியே காண நனிவிழைந்தோம்
வன்னச் செங்கால் பகுநாரை
மகிழ்ந்து புன்னை மரமீதும்
வருடை நிரைக ளதன்கீழும்
வண்டி னிசையிற் கண்டுயிலும்
தன்னிற் றானே நிகரான
தலமுந் தீர்த்தக் கூவலும்
சாருந் தெய்வக் கழையோடைத்
தாயே வருக வருகவே. 6.

பாலைப் பழித்த மொழியாளே
படையைப் பழித்த விழியாளே
பணியைப் பழித்த விடையாளே
பச்சைக் கிளியே மடமயிலே
சோலைக் குயிலே மதுரைநகர்
தொலைய நடந்தீ ரேழுநாள்
சூடா வஞ்சி நகரெய்தித்
தொடருந் தேறி வேங்கைக்கீழ்
மேலைச் சுரர்பூ மாரிபெய
விண்ணின் றிழிந்த விமானத்தில்
விரும்புங் கணவ னுடனேறும்
மெய்மைத் தெய்வத் திருக்கோலம்
சாலக் கண்டு களிகூரச்
சாரும் நெஞ்சத் துயர்தீரச்
சமயத் துதவுங் கழையோடைத்
தாயே வருக வருகவே. 7.

அழியாத் தெய்வத் தமிழ்மொழியை
அன்னை போலப் பாராட்டி
அதனைப் பழித்த வாரியரை
அடல்வெம் போரில் கைப்பிடித்தே
ஒழியா விமையத் தலையுடைத்த
உருவச் சிலையைத் தலையேற்றி
ஓதும் முறையில் பூசைசெய
உடனே வானில் வெளிவந்த
பழியாத் தெய்வத் திருக்கோலம்
பார்த்துப் பார்த்துக் களிகூரப்
பலநா ளாசை நனிகொண்டோம்
பவாய் பூவாய் பசுங்கிளியே
தளியார் தலமுந் தீர்த்தமுஞ்
சாற்றும் மூர்த்தி மூன்றுமுள
தண்ணென் சோலைக் கழையோடைத்
தாயே வருக வருகவே. 8.

வாட்டா நின்ற கொடுஞ்சுரத்தால்
வருந்துஞ் சிறுவர் தைப்பொங்கல்
வந்த தாகப் பச்சரிசி
வாழைப் பழமுங் கைக்கொண்டே
நாட்டார் களிப்பச் செல்சிறப்பும்
நறுநீர்க் கூவ லமுதருந்தி
நலிவு தீர வருசிறப்பும்
நல்ல விசாகத் திருநாளில்
காட்டா ரீந்தின் கனியருந்திக்
கரும்பு வெட்டிக் கையேந்திக்
களிசேர் சிறுவர் விளையாடுங்
காட்சிச் சிறப்பும் நீங்காத
பாட்டார் தலத்தில் வந்தருளும்
பாவாய் பூவாய் பசுங்கிளியே
பண்ணுந் தவமே தவப்பயனே
பழிதீர் கற்பின் பூங்கொம்பே
தாட்டா மரைகள் நனிதீண்டத்
தவத்தால் வந்த குருதேவன்
சாருந் தெய்வக் கழையோடைத்
தாயே வருக வருகவே.

அன்னே வருக கற்புநெறிக்
கரசீ வருக வணிகர்குலத்
தணியே வருக நல்லுயிர்கட்
கன்பே வருக மாற்றுயர்ந்த
பொன்னே வருக மழலைமொழி
பூவாய் வருக பொன்னுலகப்
பொற்பே வருக வெனவடிய[illegible]
போற்றி நின்று மனமுருக
மின்னே போல வவர்முன்னே
வெளிப்பட் டருளுந் திருவடிவம்
விழிகள் குளிரக் காட்டென்று
வேண்டின் மறுக்க விதியுண்டோ

தன்னே ரில்லா மாமணியே
சஞ்சீ வினியே புன்னைவளர்
தண்ணென் சோலைக் கழையோடைத்
தாயே வருக வருகவே. 10.

**கழையோடைக் கண்ணகி வாலாறு:—**

வார்கடலுடுத்த மணிதிகழ் இலங்கையின் வடகோடியிலே தேவரும்விழையுந் தெய்வத்தன்மை யமைந்த யாழ்ப்பாணத் திருப்பதியில் வானுறு சோலை மருதநல் வைப்பும், தேனுறு முல்லைச் சீர்கால் புறமும் மன்னிய நெய்தற் புன்னையங் கானலும் தலைமயங்கிய நவாலியூரின்கண்ணே கழையோடை என்னுமித் தெய்வத்தலம் உளது.

இங்கே, தேவரும்தொழுந் தெய்வக்கற்பின் பாவைநல்லாளாகிய கண்ணகிதேவி கோவில்கொண் டெழுந்தருளியிருக்கின்றாள்—இது மிகப் பழைய தலம். மூர்த்தி விசேடம், தலவிசேடம் தீர்த்தவிசேட முடையது.

உண்பவர்கள் பிணிநீக்கி உடம்புநலன் தருகின்ற ஓர்நறுநீர்க் கூவல் இங்கே உண்டு.

வெள்ளைப் பாம்பும் வெள்ளைக் கீரியும் வெள்ளை எலியும் உறவாடி விளையாடிய மேன்மை மிக்கது இத்தலம். மூர்த்தியும் அற்புதமான மூர்த்தி.

கண்ணகிதேவி கன்றுயோடு வந்து இளைப்பாறிய இடம் என்பதனால் இது "கனேயோடை" எனப் பெயர்வாய்ந்ததென்பர்.

மழைவறங் கூர்ந்த காலத்தும், ஊரிலே தொழுநோய் முதலிய பரவியகாலத்தும் கண்ணகிதேவிக்கு விசேட பூசைசெய்து கோவலன்கதையைப் படிக்க, மழைபெய்து நோய் நீங்கும் புதுமை இன்னும் உளது.

# சூளாமணி

[699-வது பக்கத் தொடர்ச்சி]

## இரதநூபுரச் சருக்கம்.

சயம்பவையின் வளர்ச்சியை வெளிப்பாடாகக் கூறுமல் குறிப்பினல் நம் கருத்திற்படியுமாறு புனைந்துரைக்கும் இந்தப் பாடல்களில் வடநூல் வல்லார் பரக்கப் பேசிப் புகழ்ந்துரைக்கும் த்வனி அல்லது உள்ளுறைப் பொருளின் அழகைக் காணலாம். மடிமீதும் மார்புமீதும் தோள்மீதும் தொடைமீதும் வைத்து முத்தாடிச் சீராட்டிப் பாராட்டி வளர்ப்பதனைத் "தொடப்பாடு நவின்றதே" என்று சுட்டினர். பின்னே அக்குழந்தை காதுகுத்தப் பெற்றுச் சிறப்புறுவதனைக் "குண்டலவாண்முகம்" என்றுகுறித்து வைத்தார். அவள் இளமைப்பருவத்தில்மயிர்கூடாது நிற்பதனல், நடக்குந்தோறும் குறுமயிர் நிரைகள் அசைந்து முகத்தில் விழுவதனை "வண்டு சூழ் மலர் போன் றளகக் கொடிகொண்டு சூழ்ந்து குண்டல வாண்முகம்" எனப் புனைந்துரைத்தார். இளமையிலே குழவிகளின் பார்வை பிறழும் பார்வையன்று; நிலைத்த பார்வையே யாம். இமைகொட்டாது ஒரு பொருளை நிலைத்துப் பார்ப்பதே அக் குழவிகளுக்கு வழக்கம்; கருவிழி இயங்கத் தொடங்கிப் பழக்கத்தால் கயல்போல விரைந்து இயங்குவது சிறிது கழித்துத்தான். ஆகவே அவ்வளர்ச்சியைக் "கெண்டை கண் கிளரும்" எனப்புகழ்ந்தார். சிறுகுழவியின் புருவம் கறுத்துக் கடைகுழைந்து நிற்பதில்லை. சிலஆண்டுகள் கழித்தபின்னர்த்தான் அவ்வழகைக்காணலாம். அந்த நிலையையும் சுயம்பவை அடைந்தமையைப் "புருவஞ்சிலை" எனக்குறித்தார். "உண்டுகொல் என உண்டு மருங்குலே" என்பது முன் நாம் காட்டியது போல, அடுத்ததோர் வளர்ச்சியாம். அறிவாராய்ச்சி செய்யத் தொடங்குவது அடுத்தபடியாகும்; அவ்வளர்ச்சியைப் புருவக்கொடியின் நொசிதலாகப் புனைந்துரைத்தார். ஐயுணர்வும் மெய்யுணர்வும் பழுத்துப் பயன்பட இதுபோது முளைவிடுகின்றன இவ்வாறு!

36. இவ்வளர்ச்சியை ஒருங்கியையவைத்துக்கண்டு கூத்தாடுகின்றார் தோலாமொழித்தேவர். அச்சிறுமியின் கண்ணிலே அருளானது வளரவளர அவளுடலில் ஏரெழில்வளர்கின்றகாட்சி கடவுளரே காணத்தக்க காட்சியாம். மண்ணவர்க்கும் இது கிட்டியதே! அருள்மலரமலரும் கண்களைக் காண்கின்றனர் விண்ணவர்கள். அவள் விழிக்குந்தோறும் இவ்வருளுலக வாழ்வு நமக்கில்லையே என ஏங்குகின்றனர். இவ்வருட்கொடி நம்முலகின்நின்றும் இழிந்துபோய் அங்கு மலர்கின்றதே என எண்ணித் தம் பேரிழவிற்குப் பெரிதும்வருந்துகின்றனர். அருள்கொண்டு அமலங்களாக விழிக்கும் இச்சிறுமியின் ஏரெழில் நாளுக்குநாள் வளர்வெய்துகின்றது. காண்கின்றனர் இம்மண்ணுலகினர். அவர்கள் உள்ளத்தே அன்பு வேரூன்றி வளர்கின்றது. விண்ணவரும் விரும்பும் அவ் வருட்கொடி இம்மண்ணில் வருமானல் அதனை இவர்கள் விரும்பிப் போற்றுவதனைச் சொல்லவும் வேண்டுமோ! இம்மண்ணிலே அன்புவேரூன்ற இவ்வொளி வளர்வதோ என வியந்து "மண்ணவர்" என்றுகூறுது 'மண்' என்றே விட்டுவிடுகின்றார் தோலாமொழித்தேவர். இதனைப் பெண் என்போமா? ஈதே பெண் வடிவுகொண்ட கடவுள்: தொழப்பாட்டோடு தோன்றிய குழவி பெண்ணணங்காக வளர்தலும் இயல்பே. பெண்ணைவெறுப்பவர் சமணர்கள் என்றகொள்கையை இந்தத் தமிழ்ச்சமணராம் தோலாமொழித்தேவர் எவ்வளவு அழகாகஇங்குமறுக்கின்றார்? இப்பெண்வடிவுகொண்ட கடவுள் இவ்வாற கண்ணுக்குத் தோன்றுமாறு இங்குவந்து பிறந்தபின்னரேகடவுட்டன்மையாம் பேரழகினை விண்ணவர் கண்ணும் மண்ணவர் கண்ணும் கண்டுகளிக்கின்றன. இவ்வாறு பெண்ணையும் கடவுளாக்கிய தேவர், அழகையே கடவுட்டன்மையாக்கி "ஸத்யம் ஞானம்சிவம் சுந்தரம்" என அழகுவழிபாடு புரிகின்றார்.

37. மேலே பெண்டன்மை வளர்வதைச் சுட்டிக்காட்டுகின்றார் தேவர். காமப் பேய்பிடித்தாடும் இக்காலத்தார் கொங்கை என்பதை இடக்கர்ச்சொல் என எடுத்துவிட்டு அச்சொல்லிருந்த விடத்தில் புள்ளிகளிட்டு அச்சிடுகின்றனர். புள்ளியுள்ளவிடத்திலேசிறுவர்கள் அந்தச் சொல்லைப்பெய்து புன்சிரிப்புக்கொள்ளுகின்றனர். இது யாரையோ ஏமாற்றுவது? [illegible] முலைப்பாலுண்டு வளர்ந்தவர்பேச்சோ, அல்ல[illegible]ழுதைப்பாலுண்டுவளர்ந்தவர் பேச்சோ" என ஒருபெரியார் வேறோரிடத்தில்கூறியது நினைவிற்கு வருகிறது. வீனஸின் அழகிய கல்வடிவம் யவனர்களால்செதுக்கப்பட்டுஉலகிற்கோர் அழகுவிளக்காகப்பொலிகிறது.



அக்கற்றச்சன் கையை இவர்கள் வெட்டிவிடுவார்கள் போலும். கற்றச்சன் மூளிவடிவம் செதுக்கினல் கல்லைக்காய்ச்சிக் குடித்துத்தான் அவன் பிழைக்கவேண்டும். ஆனல் பாவலன்மட்டும் மூளிவடிவம் செதுக்கி வாழவேண்டுமாம். இல்லையேல் பெண்களும் பிள்ளைகளும் ஓதலாகாத இடக்கர்ப் பாடல்களைப் பாடுகிற இழிந்த மகனுகின்றான். ஆகவே துறவியும் இதனை வாயாற் சொல்கின்றாரே எனத் தோலாமொழித்தேவருக்கும் ஒருபழி பிறக்கின்றது. துறவி பாடுவதனாலேயே இதனைத் தூயபாடல் எனலாம். தாய்முலைப் பாலுண்டார் இதுபாடத் தட்டில்லைஎன்க. கொங்கை போதருவான் குமிழ்க்கின்றன. தோழியர் அங்கராகம் பூசுகின்றனர். அருகேபொழிலில், நீண்டதொரு கொடி வளர்கின்றது. அதிலே அன்றலர்ந்த பூக்கள் நிறையப் பூத்துள்ளன. பூநிறையத் தேனெழுகி வழிகின்றது. இச்சுமையால் அக்கொடி தளர்ந்தொசிகின்றது. அக்கொடியைப்போல இவளும்ஒசிகின்றாள். கைபட்டதும் ஒசிந்து நிற்கின்ற இவள் மேல்பூச்சுப் பூசுவதைப் பொறுப்பாளோ? ஏன் பொறுக்கின்றாள் இப்பெண்கொடி? ஒப்பனையில் நாட்டமோ? இல்லை, அவளுடைய உள்ளத்தியல்பைப் பாரும் என ஒரு உயர்நிலையைக் காட்டுகின்றார்.

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்ற வள்ளுவர் கருத்தை,

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்

என நற்றிணைப்புலவர் ஒருவர் பாடுகின்றார். ஆகவே அன்புள்ள தோழியர் தனக்கு அழகூட்ட எண்ணிய போது மறுக்கவஞ்சிப் பொறுத்துக்கொள்கின்றாள்; ஈதே அருளுலக நாகரிகம்.

38. மேலும் சில திங்கள்கள் கழிகின்றன. கொங்கையால் தளர்ந்த அவள் இடை சிறிது குழைவெய்துகின்றது. இயற்கையிலேயேபெண்களாயினேர்மங்கை நிலையை யடைபவதன்முன் அழகுற முவ்வொடியலாக வளைந்து நிற்பார். அதனைக்கொங்கையின்மேல் ஏற்றிப் பாடுவதும் வழக்கம். நறுங்குழல் மங்கைமார் பலரும் சூழநின்று தீங்குவராதபடி காப்பவளர்கின்றாள். ஒரு செடிக்கு வேலியிட்டுக் காப்பது போலவாகும் இக்காவல். இளமையில் இத்தகைய காவல் வேண்டுவதொன்றே. இம்மட்டே செய்யவேண்டுவது; பின் இயற்கைதானே பூத்துக் காய்த்துப்பழுத்து இனிக்கும். "Kinter gartan" என்று குழந்தைகளைத் தோட்டம் எனப் பேசுவார் இக்கருத்தையே இந்நாளில் போற்றுகின்றனர். இதனையே "வளர்ந்து" என்ற சொல்கொண்டு சுட்டுகின்றார் நம் தோலாமொழித்தேவர். வளர்தலைச் சுட்டுதலின் "காவல்" என்பது களைகட்டல் வேலியிடல் முதலிய காவல்களையே சுட்டுவதன்றிச் சிறையாகிய காவலை இங்குச் சுட்டவில்லை என்க. மங்கையாய் நின்ற பெண்கள் இவளோடு ஆடியாடிக் களித்து முன்னடிவைத்துச் சென்று அவளுக்கு வழி காட்டுகின்றனர். "வானத்தை முட்டும் இம்மலையை யாளும் நம் மன்னவனது பழமையான குடியில் அதனை வாழ்விக்கப் பெண்களிற் சிறந்து தோற்றிய நங்காய் போற்றி" என வழிபட்டு வருகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு குழந்தையும் பாராட்டப்பட்டாலன்றோ கல்வியை நன்கு கற்றுத் தேர்ச்சி பெறும். இந்நுட்பத்தையும் காண்க. இளமையிலேயே அவள் பெருமை விளங்குதலின் இவ்வாறு உடன்நின்று பழகியவரும் போற்றுகின்றனர். இங்ஙனம் தொழப்பாடும் வழிபாடுமாக வளர்க்கின்றார் தோலாமொழித்தேவர் தமது வரலாற்று நங்கையை.

# தமிழ் நாட்டு வணிகர்

ஒருநாட்டின் நாகரிகத்துக்கு முதற்காரணமாயிருப்பது அதன் செல்வமிகுதியாகும். செல்வ வளர்ச்சிக்குத் துணைபுரிவனவற்றுள் தலை சிறந்தது வியாபாரம்; ஆதலின் வாணிகமே ஒரு நாட்டு நாகரிகத்தின் சிறப்புக்குப் பெரிதும் உதவியாயிருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஆதிகாலந் தொடங்கி மக்கள் மேற்கொண்டு செய்துவரும் ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு கடமையாகவே கருதப்பட்டு வந்திருக்கின்றது. சரீரத்தின் அங்கங்கள் எல்லாம் வேலை செய்வதனுற் சரீரம் எப்படிப் பாதுகாக்கப்படுகிறதோ அப்படியே தேசத்தின் க்ஷேமத்துக்குப் பல தொழில்களும் உதவுகின்றன. ஒவ்வொருதொழிலும் அதனைச்செய்பவர்களுக்குப் பயனளித்துவந்தாலும்பரோபகாரமாகவே இருப்பதால் சிறந்த தருமமாகவும் எண்ணப்படும்.

நாகரிகம் மிக்க மேனுடுகள் வியாபாரத்திற் சிறந்த நிலையை உடையனவாக இருக்கின்றன. நம்முடைய தமிழ்நாடு முற்காலத்தில் வியாபாரத்திலும் பிறவற்றிலும் உயர் நிலையை அடைந்து இருந்தது. இதனைப் பழைய தமிழ் நூல்களால் நாம் அறியலாம்.

தொழில்களிற் சிறந்தனவாகச் சொல்லப்படுவன உழவும் வாணிகமுமாகிய இரண்டுமேயாம். ஒருவர் பிறருக்கு அடிமைப்படாது உரிமையோடுசெய்யும் இவ்விரண்டும் பலநூல்களிற் சிறப்பித்துப் பாராட்டப்படுகின்றன. வேளாண்மையினல் விளைவிக்கப்படும் பொருள்களும் கைத்தொழில்களால் உண்டாக்கப்படும் பொருள்களும் பலநாட்டாரும்பெறும்படி செய்வித்தலில் வாணிகம் உதவுகின்றது. மனிதனுடைய வாழ்க்கைக்குவேண்டிய பொருள்கள் யாவும் ஓரிடத்திலேயே கிடைத்தல் அரிது. ஆதலின், பலவேறு இடங்களில்உண்டாக்கப்படும் பலவேறுவகைப்பொருள்களை மனிதர்களுக்குப் பயன்பெறச் செய்யும் முயற்சியே வாணிகமாகும்.

இந்த வாணிகத்தினலேயே வட மலையிற் பிறந்த பொன்னும் தென் மலையிற் பிறந்த சந்தனமும் குடகடற்பவளமும் தென்கடல்முத்தும் ஒருங்கே மனிதராற் பெறப்படும் நிலையில் சேர்கின்றன.

வாணிகத்தைப் பரம்பரையாகச் செய்துவரும் மரபினர், வணிகர் வைசிய ரெனப்படுவார். அவர்களிற் பலவகையினர் உண்டு. தனவைசியர், கோவைசியர், பூவைசியர் என்பார் ஒருவகைப் பிரிவினர். இப்பர், கவிப்பர், பெருங்குடி வாணிக ரென்பார் வேறொரு வகைப் பிரிவினர்; இப்பிரிவினர் தாம் கொண்ட பொருளளவாற் பெயர் பெற்றனர். தாம் செய்யும் வியாபாரத்தாற் பிரிக்கப்பட்ட கூலவாணிகர், பொன் வாணிகர், அறுவை வாணிகர், மணி வாணிகர் [illegible]

லியபிரிவினரும் உண்டு. சேனைவாணிகர் என்பவரைப் போன்ற உத்தியோகப் பிரிவினரும் உண்டு.

தமக்குரிய நூல்களை ஓதுதல், தமக்குரிய யாகங்களைச் செய்தல், தாம் பெற்ற பொருள்களை நல்வழியில் ஈதல், உழவு செய்வித்தல், பசுக்களைக் காத்தலென்னும் ஐந்தும் வணிகருக்குரிய தொழில்களென்று தொல்காப்பியத்துட் கூறப்பட்டிருக்கின்றது. அவர் அரசர்களால் பெரிதும் மதித்துப் பாராட்டப் பெற்றனர். இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனென்னும் சேர அரசன் தன்நாடுகாத்துவரும்சிறப்பைப்புகழ்ந்து பாடிய குமட்டூர்க் கண்ணனா ரென்னும் புலவ ரொருவர் ஒரு பாட்டில், 'உன்னுடைய நாடு நோயும் பசியும் இல்லாமல் விளங்கும்படி நீ காத்துவருகின்றாய்' என்னும்பொழுது அவன் காக்கும் முறையை விரித்துச்சொல்லுகிறார்; 'பலவகைஉணவுபண்டங்களைவிற்கும் வணிகருடைய குடிகளைக் காப்பாற்றி வருகின்றாய்' என்னும் கருத்தை அமைத்து,

"கூலம் பகர்நர் குடிபுறந் தராசு"

என்று கூறியிருக்கின்றார். இதனால் ஒரு நாட்டின் இன்பவாழ்க்கைக்கு வணிகரைப் பாதுகாத்தல் இன்றியமையாததென்பதும் அங்ஙனம்செய்தல் அரசன் கடமைகளில் ஒன்றென்பதும் தெரியவருகின்றன.

தமிழரசர்கள் தங்களுக்குள் போர்நேர்ந்த காலங்களில் தூதாக அனுப்புதற்கு உரியவர்களுள் வணிகரும் ஒருவகையினர். அரசர்களது நிலைமை உணர்ந்து சினமின்றித் தாம்கூறுவதைச்சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஆற்றலுடைமையால் அவர் அத்தொழிற்கு உரியராயினர். பண்டங்களை விற்கும் போதுகூடச் சுருங்கப் பேசி விளங்கவைக்கும் இயல்புடையவர்கள் அவர்கள். இதனை,

"புல்லியோர் பண்டங் கொள்வார்
வினவின் அப் பொருள்தம் பக்கல்
இல்லெனின் இனமா யுள்ள
பொருளுரைத் தெதிர்ம றுத்தும்
அல்லதப் பொருளுண் டென்னின்
விலைசுட்டி யறுத்து நேர்தும்
சொல்லினும் இலாபங் கொள்வார்
தொன்மர பிருக்கை சொல்வாம்"

(திருவிளையாடற் புராணம்.)

என்னும் செய்யுளால் அறியலாம்.

அரசர்களும் வணிகர்களும் கலந்துபழகினார்கள். அதனால் வணிகர்கள் இளங்கோக்களெனக்கூறப்படுவார்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் வீதியில், 'அரச குமரரும் வணிக குமரரும் குதிரைகளின்மேலும் களிற்றின்மேலும்ஏறி ஒருங்கேசென்றனர்' (சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதை, 158-60) என்று சொல்லப்பட்ட பகுதியால் அரசருக்கும் வணிகருக்கும் இருந்த நட்பு விளங்குகின்றது. அரசர்களால் அவர்கள் பலவகையான சிறப்புக்களைப்பெற்றார்கள். எட்டியென்னும் பட்டமும் அதற்குரியதாகியபொற்பூவொன்றும் அவர்களுக்கு அளிக்கப்பெற்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி முதலிய நூல்களில் வணிகரைப்பற்றிய பல செய்திகள் காணப்படும்.

வணிகர், தம் தொழிலை அறநெறி தவறாமல் செய்துவந்தார்கள். பிறர்பாற் பெறும்பொருளை மிகுதியாகப் பெறாமலும் தாம் அளிக்கும்பொருளைக்குறைவாகக்கொடாமலு[ம்] இலாபத்தை வெளிப்படச்சொல்லி விற்றுவந்தனர். பிறர் பொருளையும் தம்முடையனபோற்கருதிப் பிறருக்குத் துன்பம்வராமற் பாதுகாத்து வந்தனர்.

காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரையிலும் வணிகர்கள் மிகுதியாக இருந்தனர். அவ்விரு நகரிலும் நாளங்காடி என்னும் காலைக் கடைத்தெருவும் அல்லங்காடி என்னும் மாலைக் கடைத்தெருவும் இருந்தன. இவற்றிற் பண்டம் விற்போர் தம்மிடம் உள்ள பண்டங்கள் இன்னவென்பதைக்காட்டுவதற்கு அறிகுறியாகச் சிலவகைக் கொடிகளை நாட்டி வைப்பர். இரவிற்கொடியினாற் புலப்படுத்த இயலாதாகையால் பலவகை விளக்குகளால் அதனைப் புலப்படுத்தினார்கள். இச்செய்திகள் சிலப்பதிகாரத்தாலும் பட்டினப்பாலையாலும் விளங்கும். இவ்வழக்கங்கள் இக்காலத்தில், புகைவண்டிகளுக்குக் காட்டும் குறிகளாகப் பகலிற் கொடிகளையும் இரவில் விளக்குகளையும் உபயோகிப்பதைப்போன்றனவாகத் தோன்றுகின்றன.

காவிரிப்பூம் பட்டினத்திற் பட்டினப்பாக்கம் என்றும் மருவூர்ப்பாக்கம் என்றும் இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு. அவற்றுள் பட்டினப்பாக்கமென்பது கடற்கரையை அடுத்தஇடம். அங்கேபெரும்பாலும் வணிகர்களே வசித்தார்கள்; சுங்கச்சாலை இருந்தது; களங்கரை விளக்கமும் இருந்தது; "தாழைநிறைந்த தெருக்களில் அரசனுக்குரிய பொருள்களைக்காக்கும் காவலாளர்கள் ஒவ்வொரு நாளும் சலிப்பின்றிச்சுங்கங் கொள்வார். கப்பலிலிருந்து நிலத்தில் இறக்கப்படுவனவும், நிலத்திலிருந்துகப்பலில்ஏற்றப்படுவனவுமாகிய அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோலக் கிடக்கும் மாடங்களில் உள்ள மகளிர்கள் கைகளைக்கூப்பி, வெறியாடும் மகளிரோடு பொருந்திவேய்ங்குழல் முதலியவற்றை வாசிக்க விழாக்கொண்ட ஆவணத்தையுடையது அப்பட்டினம். தெய்வத்திற்காக எடுத்த கொடிகளும் விலைப்பண்டங்களை அறிவித்தற்குக் கட்டிய கொடிகளும், ஆசிரியர்கள் வாதுகருதி வைத்தகொடிகளும், கப்பலின் கூம்பிலுள்ள கொடிகளும், பிறவும் நகர்ப்பக்கத்தில் விரவியிருக்கும். அங்கே கடல் வழியே வந்த குதிரைகளும் நிலத்தின்வழியே வந்த மிளகுப் பொதிகளும், இமயத்திலுண்டான மணிகளும் பொன்னும், குடகுமலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், கொற்கைத்துறையிற் பிறந்த முத்தும், கீழ்கடலில் உண்டான பவளமும், கங்கையில் உண்டான பொருள்களும், காவிரியில் உண்டான வளங்களும், ஈழநாட்டிலிருந்து வந்த உணவுப்பொருள்களும், காழகநாட்டுப்பொருள்களும் பிற அரிய பொருள்களும், கூடி வளம்மிகுந்த பரந்த இடத்தையுடைய தெருக்கள் உள்ளன. பின்னும், அப்பட்டினம் வணிகர் நெருங்கி யிருக்கும் இருப்பிடங்கள் பலவற்றை உடையது. அவ்வணிகர்கள் வலையருடைய மனைகளின் முன்னே நீரில் மீன்கள் அச்சமற்றுத்திரியவும் அச்சாதியாரிடமிருந்து கொலையை நீக்குவார்கள்; கள்வரிடமிருந்து களவுத்தன்மையைப்போக்குவார்கள்; தேவர்களுக்கு ஆகுதிகளைக்கொடுத்து வழிபடுவார்கள்; பசுக்களையும் எருதுகளையும் பாதுகாப்பார்கள்; உணவையும் பிறவற்றையும் உரியார்க்கு அளித்து நுகத்தடியிலுள்ள பகலாணிபோல நடுவு நிலைமையை யுடையநெஞ்சினராய் உண்மையைக்கூறித் தம் பொருள்களையும் பிறர் பொருள்களையும் ஒப்ப நினைந்து, கொடுக்கும் பண்டத்தின் மதிப்பிற்கு அதிகமாகப் பொருளைக் கொள்ளாமலும் கொள்ளும் பொருளுக்குக் குறையப் பண்டங்களைக் கொடாமலும் பல பண்டங்களை இலாபத்தை வெளியாகச்சொல்லி விற்பார்கள்' என்று பட்டினப்பாலையில் அவர்களைப் பற்றியசெய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

ஊனுண்போர் இயல்பையும் களவுசெய்வோர் இயல்பையும்மாற்றும்திறமை அவர்கள்பால் இருந்தமை அவர்களுடைய சிறந்த தன்மையை விளக்குகின்றது. நல்லுரையினாலும் அறச் செயலாலுமே அத்தகைய செயல்களை அவர்கள் செய்து வந்தார்கள். அவர்களது ஈகைச்சிறப்பைப் பாராட்டி ஒரு பழைய செய்யுள்,

"ஈட்டிய தெல்லாம் இதன்பொருட் டென்பதே
காட்டிய கைவண்மை காட்டினார்-வேட்டொறும்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையும் சங்கும்போல் தந்து"



என்று கூறுகின்றது; 'சோழ அரசனுக்குரிய காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள வணிகர்கள்பதுமநிதியையும் சங்க நிதியையும் போலப் பொருள்களை வழங்கித் தாம் ஈட்டிய செல்வமெல்லாம் அறம் புரிவதற்கேயாமென்பதை விளக்கும் கொடைத் திறத்தைக் காட்டினார்கள்' என்பது இதன் கருத்து. ஆலயத் திருப்பணி முதலியவைகளிலும் வித்தியா தருமங்களிலும் இக்காலத்தில் ஒப்பற்று விளங்கும் தனவணிகர்களுடைய கைவண்மைக்கும் இச்செய்யுள் பொருத்தமாகத் தோற்றுகின்றது.

தமிழ் நாட்டு வணிகர்கள் பிற நாட்டாரோடும் வாணிகம் புரிந்துவந்தனர். பிற நாட்டு வணிகர்கள் இந்நாட்டுக்கு வந்து பல பண்டங்களைப் பெற்றுச் சென்றார்கள். தமிழ் நாட்டு வணிகர்கள் ஈழம், காழகம், கடாரம் (பர்மா), சீனம், சோனகம், யவனம் முதலிய நாட்டு வணிகர்களுடன் வியாபாரம் செய்தனர். கப்பல் வியாபாரம் மலிந்திருந்தது. யானைகளும் குதிரைகளும் கப்பல்களில் வந்து இறங்கின. உள்நாட்டில் வியாபாரம் செய்யச் செல்லும் வணிகர், கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். அக்கூட்டத்துக்குச் சாத்து என்று பெயர். வணிகர்களுள் சாத்தன், சாத்தப்பன் என வழங்கும் பெயர்கள் பழையகாலத்தில் சாத்துக்குத் தலைவனாக இருந்தவர்களது பெயரிலிருந்து வந்தனவாகத் தோற்றுகின்றன. வேறுநாட்டுக்குச்செல்லவிரும்பியவர்கள் அந்த வணிகர்கூட்டத்தையே துணையாகக்கொண்டுசென்று வந்தார்கள்.

பல நாட்டு வணிகர்களோடு பழகுவதனாலும் பல நாடுகளுக்குச் சென்றுவருதலாலும் அவர்களுக்குப் பலதேசத்து மொழிகள் தெரிந்திருந்தன. மணிமேகலையில், சாதுவனென்னும் வணிகனொருவனுக்கு நாகசாதியினருடைய பாஷை தெரிந்திருந்ததென்றும், தன்னைக் கொல்லவந்த நாகர்களிடம் அவன் அப்பாஷையிற் பேசி அவர்களாற் போற்றப்பட்டானென்றும் ஒருசெய்தி கூறப்பட்டுள்ளது. பலதேச சஞ்சாரத்தால் அவர்கள் உலக அநுபவமும் கூரிய அறிவும் வாய்ந்தவர்களாக இருந்தனர். கணக்கு முதலிய கலைகளில் அவர்கள் சிறந்த ஆற்றலுள்ளவர்கள்.

வணிகர்களுள், பழைய காலத்திலும் பிற்காலத்திலும் பல புலவர்கள் இருந்த[...] கனார், மதுரை அறுவை வாணி[...] மதுரைப் பண்ட வாணிகன் இள[...] வர்கள் சங்க நூல்களால் அறியப் ப[...] பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய மணி[...] செய்த சீத்தலைச் சாத்தனாரும், வேறொன்றா[...] டலகேசியை இயற்றிய நாத குத்தனாரும் வணி[...] பினரே.

செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள திருக்கச்சூரென்னும் ஸ்தலத்திலுள்ள சாஸனமொன்றில், சாத்தனார் வழிவந்த ஒருவரைப்பற்றியசெய்தி காணப்படுகிறது. அவருக்குப் பெருநம்பி யென்னும் பட்டம் உண்டென்றும் தெரிகிறது. பாண்டிய அரசனுக்கு மந்திரியாக இருந்த குலச்சிறைநாயனார் அப்பட்டம் உடையவர். தக்கயாகப் பரணி யென்னும் நூல் உரையில் பெருநம்பி யென்னும் பட்டம் அரசனுடைய மந்திரிகளுக்கும் அவர்களைப்போன்ற பெரிய அதிகாரிகளுக்கும் வழங்கப்படுவதென்று தெரிகின்றது. ஆதலின், சாத்தனார் வழிவந்த பெருநம்பி ஒரு பெரிய அதிகாரியென்று கொள்ளலாம். அதனால் வணிக மரபினர் அரசர்களுக்கு மந்திரிகளாகும் பெரியஅதிகாரிகளாகவும் இருந்தமை பெறப்படும்.

பெரிய புராணத்திற் சொல்லப்படும் நாயன்மார்களில் இயற்பகையார், அமர் நீதியார், மூர்த்தியார், காரைக்கா லம்மையார், கலிக்கம்பர் என்னும் ஐவரும் வணிக மரபினர். இவருள் மூர்த்தி நாயனார் சிவபெருமான் திருவருளால் அரசராக இருந்து ஆண்டு வந்தார். அச் செயலால் வணிகர் அரசுரிமையைப் பெறுவது முண்டென்று தோற்றுகின்றது. பதினோராந்திருமுறையிலுள்ள நூல்களை இயற்றிய பலருள் ஒருவரும் பெருந் துறவினருமாகிய பட்டினத்தடிகளின் பெருமையை அறியாதார் யாவர்? அவர், வணிகமரபிற் பிறந்து என்றும் குன்றாத பெரும்புகழை அம்மரபிற்கு உண்டாக்கினார்.

இவர்களை யன்றிப் பிற்காலத்தில் வணிகருட் சிறந்த பெருமக்கள், புலவர்கள் முதலியோர் பலர். அவர்களைப்பற்றிய செய்திகள் விரிவுடையனவாதலின் இதனோடு நிறுத்துகின்றேன்.

—"தனவணிகன்'


# கலா நிலயம்

## முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன
## உடனே பெற்றுக்கொள்வது நலம்.

**1928, 1930, 1931, 1932, 1933** வருடத்தியவை கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ. | 7 | 8 | 0 |
| ஆப்லெதர் கில்ட் பைண்ட் ,, | 9 | 0 | 0 |
| ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது | 10 | 0 | 0 |

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினால், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.


199195

## வர்த்தமானம்

...சைக்கிள்:—சிந்து நாட்டில் ரோரி ...இளைஞர்நீரில்செல்லக்கூடியசைக்கிள் ...செய்திருக்கின்றார். அவர் சில நண்பர்களை ...த்துக்கொண்டு சிந்துநதிநீரின்மீது தமது சைக்...விட்டுக் காட்டினாராம்.

* * *

குடைக் குருவி:—ஒரு வகைக் குருவிக்கு மழை வெயில்கள் தாங்க முடியாதாம். அதற்குக் கழுத்தில் இயற்கையான குடை ஒன்று அமைந்திருக்கிறதாம். வேண்டும்போது அதனைத் தலைக்கு நேராக விரித்துக் கொள்ளுமாம். அந்த இறக்கைக்குடை சுமார் ஐந்தங்குல நீளம் இருக்கிறதாம்.

* * *

நவீனப் பரிசுப் புத்தகம்:—சிகாகோவைச் சேர்ந்த ஒரு மனிதர் தனது மனைவியின் பிறந்த நாளன்று "தற்கொலை செய்துகொள்ள 200 வழிகள்" என்ற ஒருபுத்தகத்தைப் பரிசாகஅளித்தாராம். இதற்காக அவரதுமனைவியார் அவருக்கு பித்தக்கோளாறு ஏற்பட்டிருக்கின்றதென்றுவிவாகரத்துசெய்யப்போகிறாராம்.

* * *

சேவல் பெட்டை ஆயிற்று:—பெட்டைக்கோழி ஒன்றின் மூளையிலிருந்து "புரோலாக்டின்" என்ற ஒருவிதச் சத்தை எடுத்து, அதை ஒரு சேவலின் உடலில் ஊசி மூலம்(இன்ஜெக்ஷன்) குத்தியேற்றியதில் அந்தச் சேவல் நாளடைவில் மெல்ல மெல்ல மாறிப் பெட்டைக்கோழி யாகிவிட்டது. முதலில் சேவலின் குரல் மாற ஆரம்பித்துப் பின் முட்டையிடவே ஆரம்பித்துவிட்டது. இந்த வகையாகப் பெட்டைக்கோழியின் மூளையிலிருந்து சத்தெடுத்துச் சேவலுக்கு இஞ்ஜெக்ஷன் செய்து அதைப் பெட்டைக்கோழியாக்க முயற்சி எடுத்துக்கொண்டவர்கள் நியூயார்க்கைச் சேர்ந்த ஆஸ்கார் ரிட்டில், ராபர்ட் டபிள்யூ பேட்ஸ், எர்னஸ்ட் எல். ஹலர் ஆகிய மூவரே யாவர்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சனகூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்லினால்" (குழந்தை கட்டிக்கு)

சுமார் 300 போலிகள் ஏமாற்றும். | நஞ்சன்கூடு பல்பொடி | கவனித்து வாங்கவும்.

[illegible]

[பன்மங்கள் வைக்கியர்களுக்கு மட்டும்] [illegible]

**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**

**1933 Results.**

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

**Specialities.**

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**Consult**
**NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,**
Head Office:—
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**
for Fire, Motor & Accident policies.

**A sound Company.**
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷூரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விபரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பெரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனம்! "காம சாஸ்திரம்" இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)